நாள்: 03.07.2014

## இன்றைய வேளாண் செய்திகள்

# தினமலர்

## மேட்டூர் அணை நீர்வரத்து8,400 கன அடியாக அதிகரிப்பு

**மேட்டூர்**: வினாடிக்கு, 6,300 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 8,400 கன அடியாக அதிகரித்ததுதென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், கர்நாடகாவின் கபினி அணை நீர்வரத்து அதிகரித்து உள்ளது. நிரம்பும் தறுவாயில் உள்ள கபினியில் இருந்து, தொடர்ச்சியாக காவிரியில் நீர் வெளியேற்றப்பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் வினாடிக்கு, 6,300 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர் வரத்து, நேற்று காலை, 8,400 கன அடியாக அதிகரித்தது.கூடுதல் நீர்வரத்தால், 26ம் தேதி, 43 அடியாக இருந்த அணை நீர் மட்டம் நேற்று, 47 அடியாகவும், 14 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, 16 டி.எம்.சி., யாகவும் அதிகரித்துள்ளது.

## தண்ணீர் தேடாத கிராமம்: மழைநீரை சேமித்து சாதனை



**முதுகுளத்துார்** : ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்துார் அருகே

மைக்கேல்பட்டிணத்தில் ஊரணியில் மழைநீர் சேமிக்கப்பட்டு குடிநீராக பயன்படுத்தப்படுகிறது. இதனால் அங்கு 11 ஆண்டுகளாக குடிநீர் தட்டுப்பாடே ஏற்பட்டது இல்லை.

மைக்கேல்பட்டிணம் கிராமத்தில் வீடுகள், அரசு அலுவலகங்களில், நுாறு சதவீதம் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் இருந்து வெளியேறும் கூடுதல் மழைநீர், 5 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஊரணியில் அமைக்கப்பட்ட இரண்டு ராட்சத தொட்டிகளில் சேமிக்கப்படுகிறது. ஊரணி எப்போதும் நிரம்பியே உள்ளது.இந்த தண்ணீரை வீட்டிற்கு எடுத்துச்செல்லும் மக்கள், 'தேத்தாங்கொட்டை' விதைகள் மூலம் தண்ணீரை தெளிய வைத்து, காய்ச்சி பயன்படுத்துகின்றனர். இந்த தண்ணீர், 'மினரல் வாட்டரை' விட துாய்மையாக உள்ளதாக கிராம மக்கள் பெருமையுடன் கூறுகின்றனர்.

மிக்கேல் கூறியதாவது: கலங்கலான தண்ணீரை தெளிய வைக்க, கடைகளில் 200 கிராம்'தேத்தாங்கொட்டை' விதைகளை 5 ரூபாய்க்கு வாங்கி, மண் பானைகளில் உரசி, பின்னர் காய்ச்சி பயன்படுத்துவதால், எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை. எங்கள் ஊராட்சியில், 11 ஆண்டுகளாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டதில்லை. ஊராட்சியில் வெற்றிகரமான மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்தியதை பார்வையிட, தினமும் வெளியூர்களில் இருந்து பார்வையாளர்கள் வந்து செல்வது, எங்களுக்கு பெருமையாக உள்ளது, என்றார்.

ஊராட்சி தலைவர் ஜேசுமேரி கூறியதாவது: 2003ல் அ.தி.மு.க., ஆட்சியின் போது, மழைநீர் சேகரிப்பு திட்டத்தை, ஊராட்சியில் அமல்படுத்தியதற்காக மாநில விருது பெற்றேன். மேலும், குடிநீர் பற்றாக்குறையை தீர்க்க நடவடிக்கை எடுத்ததற்காக, உலக வங்கி சார்பில் விருது பெற்றேன். 30 லிட்டர் கொள்ளவுள்ள மண்

பானைகள், அனைத்து வீடுகளிலும் உள்ளன. இவற்றில் தேத்தாங்கொட்டைகளை உள்புறம் உரசி தண்ணீரை ஊற்றினால் தெளிந்து விடும். அதை காய்ச்சி வைத்து நன்னீராகவே மக்கள் பயன்படுத்துகின்றனர், என்றார்.

## அத்யாவசிய பொருள் பட்டியலில் வெங்காயம்

**புதுடில்லி** : தற்போது 22 அத்யாவசிய பொருட்களின் பட்டியலில் வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியனவும் சேர்க்கப்பட்டுள்ளன. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கின் விலையை கட்டுப்படுத்துவதற்காக இவற்றின் பயன்பாட்டை குறைத்துக் கொள்ள மக்களிடம் அறிவுறுத்த வேண்டும் என மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

## மும்பையில் பலத்த மழை




**மும்பை**: காங்கிரசை சேர்ந்த முதல்வர், பிருத்விராஜ் சவான் தலைமையிலான மகாராஷ்டிர மாநில தலைநகர் மும்பையில், நேற்று பலத்த மழை பெய்தது. இதனால், சாலை, ரயில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டதால், மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்தது. பலத்த மழையால், விமானங்களும் சற்று தாமதமாகவே இயக்கப்பட்டன.இது போன்ற பலத்த மழை, இன்னும் இரு நாட்களுக்கு தொடரும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மழை 'கை' கொடுக்குமா? ஆறு நாட்கள் 'ஆறாக' கொட்டிய மழை எங்கே ? சிறுவாணி அணைப்பகுதியில் தீவிர கண்காணிப்பு**




**கோவைக்கு**; குடிநீர் வழங்கும் சிறுவாணி அணைப்பகுதியில், ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை தீவிரமடையும் என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடந்த மாதம் ஆறு நாட்கள் மட்டுமே மழை பெய்து ஏமாற்றமளித்தது. இந்நிலையில், இம்மாதம் கனமழை பொய்யும் என்ற நமபிக்கையில் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் காத்திருக்கின்றனர். கோவைக்கு குடிநீர் ஆதரமான சிறுவாணி அணையில் 650 மில்லியன் கனஅடி தண்ணீர் தேக்க முடியும்; தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் அணையானது ஆண்டுக்கு இரண்டு முறை நிரம்புவது வழக்கம். கடந்த மூன்று ஆண்டுகளாக மழை பொழிவு குறைந்துள்ளதால், சிறுவாணி அணை நிரம்புவது தடைபட்டுள்ளது. கடந்த 2012ல் அணை ஒருமுறை கூட நிரம்பவில்லை. கடந்தாண்டு ஜூலை கடைசி நாளில் அணை நிரம்பியது. அதன் பிறகும் மழை தொடர்ந்ததால், 20 நாட்கள் அணையில் இருந்து உபரி நீர் வெளியேறியது. இந்தாண்டு, அணையின் நிரந்தர நீர் இருப்பு அளவுக்கு நீர்மட்டம் குறைந்தது. கடந்த மே மாதம் இறுதியில் அணையில் 2.65 மீட்டர் மட்டுமே நீர்மட்டம் இருந்தது. இதனால், அணையில்

இருந்து தண்ணீர் எடுக்கும் அளவு, 90 மில்லியன் லிட்டரில் இருந்து, 40 மில்லியன் லிட்டராக குறைக்கப்பட்டது.

கோவை மாநகராட்சியில், 30 வார்டுகளில் வசிக்கும் எட்டு லட்சம் மக்களுக்கும், வழித்தட கிராமங்களில் வசிக்கும் இரண்டு லட்சம் மக்களுக்கு சிறுவாணி குடிநீர் வழங்கும் நேரமும், அளவும் குறைக்கப்பட்டது. மாநகராட்சி பகுதியில் சிறுவாணி குடிநீர் வழங்கும் பகுதிகளில், பில்லுார் குடிநீர் வழங்கப்பட்டது. சிறுவாணி வனப்பகுதியில் ஜூன் 11ல் மழை பெய்யத்துவங்கியது. சாரலாக வந்த மழையால், அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கவில்லை. கடந்த 17ம் தேதி நிலவரப்படி, சிறுவாணி அணையில், 0.66 மீட்டராக நீர்மட்டம் இருந்தது. அதன்பின் கடந்த, 19ம் தேதியன்று சிறுவாணி வனம் மற்றும் அடிவாரத்தில் கனமழை பெய்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் இரண்டு மீட்டர் உயர்ந்தது. அதன்பிறகு, மழை பொழிவு தீவிரமடையாததால், அணையின் நீர்மட்டம் உயர்வது தடைபட்டுள்ளது. நேற்றைய நிலவரப்படி சிறுவாணி அணையில், 3.75 மீட்டர் நீர்மட்டம் உள்ளது. ஜூன் மாதத்தில், கனமழை பெய்யும், சிறுவாணி அணையில், 10 மீட்டராவது நீர்மட்டம் உயரும் என, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் எதிர்பார்த்திருந்தனர்.ஆனால், மழை பொழிவு தீவிரமடையவில்லை; நீர்மட்டமும் உயரவில்லை. இம்மாதம் மழை தீவிரமடையும் என்ற நம்பிக்கையில் அதிகாரிகள் காத்திருக்கின்றனர்.

குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறுகையில், 'கடந்த மாதம் வனப்பகுதியில் ஆறு நாட்கள் மட்டுமே மழை பெய்தது; 176 மி.மீ., மழையளவு பதிவானது.அடிவாரத்தில் எட்டு நாட்கள் மழை பெய்து, 110 மி.மீ., மழையளவு பதிவானது. கடந்த 19ம் தேதி வனப்பகுதியில் அதிகபட்சமாக 135 மி.மீ., அடிவாரத்தில் 93 மி.மீ., மழை பெய்தது. அதன்பின், சிங்கிள் டிஜிட்டில் மழையளவு பதிவாகியுள்ளது. கடந்தாண்டு ஜூலையில் பெய்த மழையால் அணை நிரம்பியது.

இந்தாண்டும் அதேபோன்று பருவமழை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையுள்ளது' என்றனர்.

## கறுப்பு திராட்சை விலை குறைவு: பொதுமக்கள் வாங்க ஆர்வம்

**தர்மபுரி**: தர்மபுரி கறுப்பு திராட்சை விலை குறைந்து உள்ளதால், பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். தமிழகத்தில், கடந்த சில தினங்களாக பகல் நேரங்களில் வெயில் வாட்டி வருகிறது. வெயிலுக்கு இதம் அளிக்கும் வகையில் உள்ள பழங்களை வாங்கி ருசித்து, உடல்சூட்டை தணிக்க பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, வெயிலுக்கு இதம் அளிப்பதோடு மட்டுமின்றி, வைட்டமின்கள் நிறைந்த, திராட்சை பழங்களை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பு சுவைப்பது உண்டு. இதனால், பழக்கடைகளில் திராட்சை பழங்களுக்கு, எப்போதும் வரவேற்பு உள்ளது. மேலும், திராட்சை பழத்தின் விலையும் கட்டுபடியானதாக உள்ளதால், திராட்சை பழத்தை அனைத்து தரப்பு மக்களும் வாங்கி உண்டு வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில், திராட்சை சாகுபடி ஒரு சில ஏக்கரில் மட்டும் உள்ளது. இதனால், தர்மபுரி மாவட்டத்துக்கு தேனி, கம்பம், போடி, மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்து அதிகளவில் திராட்சை விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் திராட்சை சாகுபடி அதிகரித்துள்ளது. இதனால், ஒரு கிலோ கருப்பு திராட்சை பழம், 25 ரூபாய் முதல், 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கோடை காலத்தில் திராட்சை பழ விலை குறைந்துள்ளதால், மக்கள் ஆர்வத்துடன், திராட்சை பழங்களை வாங்கி செல்கின்றனர்.

இதுகுறித்து, தர்மபுரியை சேர்ந்த பழவியாபாரி சுகுமார் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில் திராட்சை சாகுபடி பூட்டுகாரன் தோப்பு பகுதியில் மட்டும் ஒரு சில ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நேரடி விற்பனையில் அவர்கள் ஈடுபட்டு வருவதால், தர்மபுரி மாவட்ட விவசாயிகள் கறுப்பு திராட்சையை தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்து திராட்சையை வாங்கி வந்து விற்பனை செய்து வருகின்றனர். தற்போது, கறுப்பு திராட்சை பழ விளைச்சல் தேனி,

திண்டுக்கல் மாவட்டங்களில் அதிகரித்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன், 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட, ஒரு கிலோ கறுப்பு திராட்சை தற்போது, 25 ரூபாய் முதல், 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக, கோடை காலம் துவங்கிய நேரத்தில், ஆப்பிள், ஆரஞ்சு உள்ளிட்ட பழங்களின் விலை உயர்ந்துள்ளதால், கோடையில் இதம் அளிக்கும் திராட்சை பழம் குறைந்த விலைக்கு கிடைப்பதால், பொதுமக்கள் அதிகளவில் திராட்சை பழங்களை வாங்கி செல்கின்றனர், என்றார்.

## மஞ்சள் விலையை ஈடுகட்ட புதிய யுக்தி இரட்டிப்பு மகசூலாக வெங்காயம் சாகுபடி

**கோபிசெட்டிபாளையம்**: மஞ்சளுக்கு உரிய விலை கிடைக்காததால், கோபி பகுதி விவசாயிகள், இரட்டிப்பு மகசூல் பெற, மஞ்சளுடன் சின்ன வெங்காயம் ஊடுபயிராக சாகுபடி செய்துள்ளனர்.

ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு, ஈரோடு மாவட்டத்தில் இருந்து, 60 சதவீத மஞ்சளும், கர்நாடகா, திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி, வேலூர் போன்ற பகுதியில் இருந்து, 40 சதவீதம் மஞ்சள் வரத்தாகிறது. ஈரோடு மாவட்டத்தில் மைசூரு சம்பா, 8ம் நம்பர், 10ம் நம்பர் உள்ளிட்ட ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுவது வழக்கம். எட்டாம் நம்பர் மஞ்சள் டிசம்பர் மாதத்தில் அறுவடை பணி துவங்கி, ஜனவரி மாதத்தில் மார்க்கெட்டுக்கு வரத்தாகும். கர்நாடகா, சேலம், ஆத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், திருவண்ணாமலை, வேலூர் பகுதியில் இருந்து, வழக்கமாக ஃபிப்ரவரி, 15ம் தேதிக்கு மேல் புதிய மஞ்சள் வரத்தாகும். மைசூரு சம்பா, 10ம் நம்பர் ஆகிய ரகங்கள் ஃபிப்ரவரி, மார்ச் மாதத்தில் அறுவடைக்கு வரும்.

கடந்த, 2010ல், மஞ்சள் விலை வரலாறு காணாத விலையாக, 17 ஆயிரம் வரை விற்பனையானதால், தமிழகத்தில் மஞ்சள் சாகுபடி பரப்பு அதிகரித்தது. 2010-11 நிதியாண்டில், ஈரோடு மாவட்டத்தில், 11,338 ஹெக்டரும், 2011-12ல், 16,664 ஹேக்டரும், 2012-13ல், 8,165 ஹெக்டரும் மஞ்சள் சாகுபடி செய்திருந்தனர்.

மஞ்சள் வரத்து அதிகரித்ததால், கடந்த, 2013-14 நிதியாண்டில், ஈரோடு மாவட்டத்தில் வெறும், 3,757 ஹெக்டர் அளவுக்கு மட்டும், மஞ்சள் சாகுபடியானது.

இந்நிலையில், கடந்த, இரு ஆண்டுகளாக நிலவிய வறட்சி, மஞ்சள் விலை இறக்கம் உள்ளிட்ட காரணங்களால், மஞ்சள் சாகுபடி பரப்பளவு நடப்பாண்டில் கணிசமாக குறைந்துள்ளது.

கோபி தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு, கடந்த ஜூன், 12ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்நீரை நம்பி, நெல், வாழை, கரும்பு ஆகிய பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். பத்துமாத சாகுபடியான, மஞ்சள் சாகுபடி, கோபி, பாரியூர், குண்டேரிப்பள்ளம், கெம்பநாயக்கன்பாளையம், பெரும்பள்ளம் உள்ளிட்ட பகுதியில், குறைந்தளவில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மஞ்சள் விலையை ஈடுகட்ட, விவசாயிகள் கைச்செலவுக்காக, இரட்டிப்பு மகசூல் பெற, ஊடுபயிர் சாகுபடிக்கு ஆர்வம் காட்டியுள்ளனர். கோபி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில், மஞ்சளுடன் ஊடுபயிராக சின்ன வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர்.

இதுபற்றி பாரியூர் பகுதி விவசாயி கூறியதாவது:

மஞ்சள் பத்து மாதங்களும், சின்ன வெங்காயம், 80 நாள் சாகுபடியாகும். ஒரு ஏக்கருக்கு, 800 கிலோ மஞ்சள் விதைத்தால், பத்து மாதம் கழித்து, 25 குவிண்டால் மஞ்சள் கிடைக்கும். ஊடுபயிராக, ஏக்கருக்கு, 20 கிலோ விதைத்தால், 80 நாளில், மூன்று டன் சின்ன வெங்காயம் கிடைக்கும். தற்போது, வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைக்கிறது. இதில், நோய் தொற்று, வேறு பாதிப்பு இருக்காது. எனவே, ஒரே நேரத்தில் இரு மகசூல் கிடைப்பதால், விவசாயிகளுக்கு கொஞ்சம் லாபம் கிடைக்கும், என்றார்.

## பண்ணை கழிவுகளின் மறுசுழற்சி பயிற்சி பெற அதிகாரி அழைப்பு

**கரூர்**: கரூர் அருகே "லாபகரமான கறவை மாடு வளர்ப்பும் பண்ணை கழிவுகளின் மறுசுழற்சியும்' என்ற பயிற்சி வரும், 17ம் தேதி துவங்குகிறது' என்று, கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் மற்றும் தலைவர் அகிலா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் நிதி உதவியுடன் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின், ஊரக தொழில்முனைவோர் பயிற்சி மையத்தின் நிதி உதவியுடன், "லாபகரமான கறவை மாடு வளர்ப்பும் பண்ணை கழிவுகளின் மறுசுழற்சியும்' என்ற பயிற்சி வரும், 17ம் தேதி முதல், 21ம் தேதி வரை, ஆறு நாட்களுக்கு நடத்தப்பட உள்ளது.

இப்பயிற்சியில், அறிவியல் ரீதியான கறவை மாடு வளர்ப்பில் முக்கிய பங்களிக்கும் பராமரிப்பு முறைகளான பண்ணை வீட்டமைப்பு, நவீன மேலாண்மை, மாடுகளை தாக்கும் நோய்கள் அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து பயிற்சியளிக்கப் படுகிறது.

மேலும், மூலிகை மருத்துவ சிகிச்சை முறைகள், விற்பனை உத்திகள், வங்கிக் கடன் உதவி, பண்ணைக்கான காப்பீடு மற்றும் பண்ணைப் பொருளாதாரம் ஆகிய தலைப்புகள் மற்றும் பசுந்தீவன உற்பத்தி பதப்படுத்துதல், கலப்பு தீவனம் தயாரித்தல், அசோலா வளர்ப்பு, தூய்மையான பால் உற்பத்தி, பால் பொருட்கள் தயாரிப்பு பற்றியும் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு உற்பத்தி ஆகிய தலைப்புகள் குறித்து பல்கலை பேராசிரியர்களால் நடத்தப்பட உள்ளது. பயிற்சியில் பங்கேற்க ஆர்வம் உள்ளவர்கள் அலுவலக ஃபோன் எண், 04324 294335 தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். தவறாமல் பயிற்சி மைய வளாகத்துக்கு வர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வைக்கோல் இன்றி பனை நாருக்கு மவுசு

சாயல்குடி : கடலாடியில் கரிமூட்டம் தொழிலுக்கு வைக்கோல் இல்லாததால், பனைநாருக்கு மவுசு அதிகரித்துள்ளது.

கடலாடி பகுதியில் கடந்தாண்டு மழை பொய்த்து போனதால், பிடி சாவி கூட மிஞ்சவில்லை. ஆடு, மாடுகளுக்கு மேய்ச்சலும், வைக்கோலும் இல்லை. விவசாயம் பொய்த்து போனாலும், கரிமூட்டம் தொழில் செய்து சிலர் பிழைப்பு நடத்தி

வருகின்றனர். பனை தும்புகளை கரி மூட்டம் தொழிலுக்கு பயன்படுத்தும் வழக்கம் அதிகரித்ததால், பனை நார்களுக்கு மவுசு அதிகரித்தது. ஒரு லாரி லோடு பனை தும்பு ரூ.5,000 வரை விற்கின்றனர். கடுகுசந்தை பன்னீர்செல்வம் கூறுகையில், ""தும்பு வாங்குவதற்கே குறிப்பிட்ட பணம் செலவு செய்கிறோம். இதனால், லாபம் குறைகிறது. நேரம் விரையமாகிறது. புகையால் நோய் பாதித்து அவதிப்படுகிறோம். இதனால் கரிமூட்டம் போடாமல் கருவேல மர விறகு, வேர்களை ஒரு டன் ரூ.2,400க்கு விற்கிறோம். லாபமும் கூடுதலாக கிடைக்கிறது, என்றார்.

## கரும்பில் ஊடு பயிராக சின்னவெங்காயம் சாகுபடி

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி பகுதியில் கரும்பு பயிரில் ஊடு பயிராக சின்னவெங்காயம் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம் பகுதி விவசாயிகள் பலர் சின்னவெங்காயம் பயிரிட்டு வருகின்றனர். வெங்காயத்தின் விலையேற்றத்தால் மஞ்சள், மிளகாய் பயிர்களில் ஊடு பயிராகவும் சின்ன வெங் காயம் பயிரிட்டனர். வெளிமாநிலத்திலிருந்து சின்னவெங்காயம் கொள்முதல் செய்யும் வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. இதனால் உள்ளூர் வியாபாரிகள் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் வாங்கிச் செல்வதால் நல்ல லாபமும் கிடைத்து. விவசாயிகள் பலர் சின்னவெங்காயம் சாகுபடி செய் வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாய நிலங்களில் சின்னவெங்காயம் ஊடுபயிராக சாகுபடி செய்யப்படுகிறது.

## காளையார்கோவிலில் கடலை சாகுபடியில் பாதிப்பு

**காளையார்கோவில்** : காளையார் கோவிலில் கடலை சாகுபடியில் மகசூல் குறைவு,விலை இல்லாமல் விவசாயிகள் கவலையில் உள்ளனர். இவ் ஒன்றியத்தில் கிணற்று பாசனமுறையில், கடலை சாகுபடி நடந்து வருகிறது.

90 நாட்களுக்குள் மகசூல் கிடைத்து வருவதால், ஆண்டுக்கு குறைந்தது மூன்று போக சாகுபடி நடந்து வந்தது. சில ஆண்டுகளாக மழை பொய்த்து விட்டதால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கடலை சாகுபடியில் மகசூல் குறைந்ததோடு, சரியான விலையும் கிடைப்பதில்லை. வேலை ஆட்கள் கிடைப்பதில்லை உட்பட பல்வேறு காரணங்களால் சாகுபடி பரப்பளவு 3 ஆயிரம் ஏக்கரிலிருந்து, 500 ஏக்கராக குறைந்துள்ளது. விவசாய தொழிலை தவிர வேறு வழியில்லாதவர்கள் கடலை சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர்.அதுவும் கைகொடுக்கவில்லை. பெரும்பாலான விவசாயிகள் மகசூல் இல்லாமல் கண்ணீர் வடிக்கின்றனர். மரக்காத்தூர் விவசாயி முருகன் கூறுகையில்,"" ஒரு ஏக்கர் கடலை சாகுபடி செய்ய 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. 15 லிருந்து 20 மூடை வரையிலும் மகசூல் கிடைக்கும். ஆனால், 1.5 ஏக்கரில் சாகுபடி செய்த போது மகசூல் 4 மூடை வந்துள்ளது. கடலை பறிக்கும் கூலி ஆட்கள் சம்பளத்துக்கூட மகசூல் வரவில்லை. ஏக்கருக்கு 12 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடி பொருட்களை அரசே கொள்முதல் செய்வதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும்," என்றார்.

## திருப்புவனத்தில் அதிகபட்சம் 48.4 மி.மீ., மழை பதிவானது

**சிவகங்கை** : மாவட்டத்தில், நேற்று முன்தினம் அதிகபட்சமாக திருப்புவனத்தில், 48.4 மி.மீ., மழை பதிவானது.

மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்துவிட்டதால், ஊரணி, குளங்களில் நீர்வற்றி காணப்படுகிறது. இதனால், நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து, குடிநீர் தட்டுப்பாடு ஆங்காங்கே தலைதூக்க துவங்கிவிட்டது. அது ஒரு புறம் இருக்க, கோடை வெயிலின் தாக்கத்தால், மக்கள் பகலில் நடமாடவே

முடியாத வகையில், உஷ்ணத்தால் தவித்தனர். இந்நிலையில், கடந்த 2 நாட்களாக, கோடை வெயிலின் தாக்கம் குறைந்து, மேக மூட்டமாக காணப்பட்டது. உஷ்ண வேகம் குறைந்து, குளிர்ந்த காற்று வீச ஆரம்பித்தது. நேற்று முன்தினம் மாலை, 5:30 மணிக்கு திடீரென இடி, மின்னல், காற்று வேகமின்றி, பலத்த மழை பெய்ய துவங்கியது. இரவு 7 மணி வரை மழை நீடித்தது. மழை அளவு: நேற்று காலை 8 மணி நிலவரப்படி, அதிகபட்சமாக 48.4 மி.மீ., மழை பதிவானது. சிவகங்கையில், 45; காரைக்குடி, 16; இளையான்குடி, 6 மி.மீ., வரை பதிவானது. மற்ற 3 தாலுகாக்களில், மழை பதிவாகவில்லை.

## மானாவாரி கடலை செடி கருகல் மேச்சேரி பகுதி விவசாயிகள் விரக்தி

**மேச்சேரி**: மேச்சேரி சுற்றுப்பகுதியில் நடப்பாண்டு வறட்சியால் மானாவாரி நிலக்கடலை செடி கருகியது, விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியத்தில், நடப்பாண்டு எம்.காளிப்பட்டி, பொட்டனேரி, அரங்கனூர், வெள்ளாறு, மல்லிகுந்தம் சுற்றுப்பகுதிகளில், விவசாயிகள் மானாவாரி பயிராக, 1,350 ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்தனர். வழக்கமாக ஜூன் மாதம் தீவிரம் அடையும் தென்மேற்கு பருவமழையால் மானாவாரி பயிர் வளர்ந்து பலன் கொடுக்கும். நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை தாமதம் ஆனதாலும், மழை அளவு குறைந்ததாலும், மேச்சேரி பகுதியில் பெரும்பாலான இடங்களில் நிலம் வறண்டு, சாகுபடி செய்த நிலக்கடலை பயிர் கருகி விட்டது. இதனால், ஒரு ஏக்கருக்கு, 10 ஆயிரம் ரூபாய் வரை, நஷ்டம் ஏற்பட்டதால் நடப்பாண்டு மேச்சேரி பகுதியில் தென்மேற்கு பருவமழையை நம்பி நிலக்கடலை பயிர் சாகுபடி செய்த விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

## எண்ணெய் ஆலைகளில் அதிகாரிகள் ஆய்வு

**ஆத்தூர்**: ஆத்தூர் பகுதியில், சேகோ பேக்டரி மற்றும் எண்ணெய் ஆலைகளில், உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். சேலம் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை, நியமன அலுவலர் டாக்டர் அனுராதா தலைமையிலான, உணவு

பாதுகாப்பு ஆய்வாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள், ஆத்தூர் பகுதியில் திடீர் ஆய்வு செய்தனர். ஆத்தூர், முல்லைவாடி செல்லியம்மன் ஆயில் மில்லில், சமையல் எண்ணெய் என, குறிப்பிடப்பட்டிருந்த பாக்கெட்டுகளை ஆய்வு செய்தனர். அதில், பாமாயில் எண்ணெயை, சமையல் எண்ணெய் என, குறிப்பிடக் கூடாது. எந்த வகை எண்ணெய் என்பதை, குறிப்பிட்டு தான் விற்பனை செய்ய வேண்டும். என, எச்சரித்தனர். தொடர்ந்து, மற்றொரு ஆயில் மில்லில், 80 சதவீதம் பாமாயில், 20 சதவீதம் கடலை எண்ணெய் என, பாக்கெட் மீது, கடலை படம் மட்டும் குறிப்பிட்டு, கடலை எண்ணெய் என, விற்கக் கூடாது என, எச்சரிக்கப்பட்டது. பைத்தூர் ரோடு மற்றும் அம்மம்பாளையம் பகுதியில் உள்ள, சேகோ பேக்டரிகளில், மக்காச்சோளம் கலப்படத்தில், ஸ்டார்ச், ஜவ்வரிசி தயார் செய்யப்படுகிறதா என, குடோன்களில் ஆய்வு செய்தனர். உணவு பொருட்களில் கலப்படம் இருந்தால், எவ்வித பாரபட்சமுமின்றி, கடும் நடவடிக்கை எடுக்கப்படும். என, உணவு பாதுகாப்பு துறை அதிகாரி எச்சரிக்கை விடுத்தார்.

## ஆலை நிர்வாகம் முடங்கி உள்ளது கரும்பு விவசாயிகள் சங்கம் தீர்மானம்

நிர்வாகக்குழு இருந்தும், அது முடங்கிப்போய் செயலற்று உள்ளது' என, பேரவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மோகனூரில், சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின், 31வது ஆண்டு பேரவைக் கூட்டம் நடந்தது. சங்கத் தலைவர் கந்தசாமி தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் நடராஜன், ஆண்டறிக்கை வாசித்தார். கூட்டத்தில், மத்திய, மாநில அரசுகள், 2014-15ம் அரவையாண்டுக்கு, டன் ஒன்றுக்கு, 3,500 ரூபாய் என, கரும்பு விலை அறிவிக்க வேண்டும். சர்க்கரை ஆலை அங்கத்தினர்கள் பங்கு மூலதனத்துக்கு, "டிவிடெண்டு' சட்டப்படி கணக்கிட்டு, ஆலை நிர்வாகம் விரைவில் வழங்க, தமிழக அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடும் வறட்சியால் காய்ந்து கொண்டிருக்கும் கரும்பை, முன்னுரிமை அடிப்படையில் ஆலை நிர்வாகம் வெட்டிக் கொள்ள வேண்டும். அவ்வப்போது

கரும்பு டிவிசன் வாரியாக கூட்டத்தை கூட்ட வேண்டும். எரிசாராய ஆலை கழிவு நீரை, ஆலைக்கு அருகிலேயும், புறம்போக்கு நிலத்திலும் கான்ட்ராக்டர்கள் விடுவதால், அருகில் உள்ள கிணறுகளில் தண்ணீர் மாசடைகிறது. ஆலை நிர்வாகத்துக்கு புதிய நிர்வாகக்குழு இருந்தும், அது முடங்கிப்போய் செயலற்று உள்ளது. புதிய நிர்வாக இயக்குனரும், விவசாய சங்கங்களை அழைத்து கரும்பு நடவு, பதிவை அதிகரிக்க எவ்வித முன் முயற்சியும் எடுக்கவில்லை. ஆலையை நஷ்டத்தில் இயக்கி, தனியாருக்கு தாரை வார்க்க சதி நடக்கிறதோ என்ற சந்தேகம் விவசாயிகள் மனதில் எழுந்துள்ளது.

ஆலை லாபத்தில் இயங்க, ஆலை நிர்வாகக்குழுவும், நிர்வாக இயக்குனரும் விவசாய சங்க பிரதிநிதிகளை அழைத்து பேசி, தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.முன்னதாக புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக கந்தசாமி, பொதுச்செயலாளராக நடராஜன், பொருளாளராக ஸ்ரீதரன், துணைத்தலைவர்களாக எட்டிக்கன், ராமசாமி, துணைச் செயலாளர்களாக கனகராஜ், நவலடி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## மண்புழு உரம் கூடம் ஓகே; திறப்பு விழாவுக்காக தாமதம்

**ராஜபாளையம்**: ராஜபாளையத்தில் நகராட்சி சார்பில் அமைக்கப்பட்ட மண்புழு உரம் தயாரிக்கும் கூடம், திறப்புவிழா காணாமல் உள்ளது.

நகராட்சி பகுதிகளில் தினமும் 55 டன் குப்பை சேகரமாகின்றன. இவை, நகரில் இருந்து 11 கி.மீ., தூரம் உள்ள தொட்டியபட்டி நகராட்சி குப்பை கிடங்கில் கொட்டப்படுகின்றன. அங்கு கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும் மக்கும் குப்பை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டு, அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில், ராஜபாளையம் மகளிர் போலீஸ் ஸ்டேஷன் எதிரே, மக்கும் குப்பை மூலம் மண்புழு உரம் தயாரிக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டது. இதற்காக நவீன வசதிகளுடன் ஷெட் அமைக்கும் பணி கடந்த

ஆண்டு முடிந்தது. ஆனால் இதுவரை திறப்புவிழா காணாததால், மண்புழு உரம் தயாரிக்கும் திட்டம் கேள்விக்குறியாக உள்ளது. நகராட்சி பகுதியில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் பல உள்ளன. இந்த குழுவினருக்கு, உரம் தயாரிக்கும் பயிற்சி அளித்தால், பொருளாதார ரீதியாக பெண்கள் முன்னேற வாய்ப்பு உள்ளதால்,இதை உடனே திறக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

## குறைந்து வரும் பருவ மழை; நெல் விவசாயம் பாதிப்பு

**கூடலூர்** : கூடலூர் பகுதியில் எதிர்பார்த்த அளவுக்கு பருவமழை பெய்யாத காரணத்தால், நடப்பாண்டில் நெல் விவசாயம் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. கூடலூரிலுள்ள வயல் நிலங்களில், கோடையில் காய்கறிகளும், பருவமழை காலத்தில் நெல்லும் பயிரிடப்படுவது வழக்கம். ஆண்டுக்கு ஆண்டு காலம் மாறி பொழியும் பருவமழையால், பல பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் தேயிலை, காபி தோட்டமாகவும், வீட்டுமனைகளாகவும் மாறி வருகின்றன. இதனால், நெல் விவசாயத்தின் பரப்பளவு தொடர்ந்து குறைந்து வருகிறது. நடப்பாண்டில், எதிர்பார்த்த அளவுக்கு பருவமழை பெய்யாத காரணத்தால், வயல் நிலங்கள் தண்ணீர் இன்றி காணப்படுகின்றன. இதனால், விவசாயிகள் வயல் பணியை கூட இதுவரை துவங்க முடியாமல் உள்ளனர்.

இது குறித்து விவசாயி ராஜன் கூறுகையில்,""ஒரு காலத்தில், இப்பகுதியில் ஆயிரம் எக்டர் பரப்பளவில், இரு போகம், நெல் விளைவிக்கப்பட்டது. காலநிலை மாற்றம், பருவமழை குறைவால், நெல் விவசாயம் ஒரு போகமாக மாறியதுடன், விவசாயத்தின் பரப்பளவும் படிப்படியாக குறைய துவங்கியது.தண்ணீர் பிரச்னை, வேலை ஆட்கள் கூலி உயர்வு, உரங்களில் விலை ஏற்றம் காரணமாக, பலர் நெல் விவசாயத்தில் ஈடுப்படுவதை தவிர்த்து வருகின்றனர். இதனால், நெல் விவசாயத்தின் பரப்பளவு தற்போது, 450 எக்டராக குறைந்து விட்டது.இந்த

ஆண்டு, இதுவரை எதிர்பாத்த அளவுக்கு பருவமழை பெய்யததால், நெல் விவசாயம் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்தால், எதிர்காலத்தில் நெல் விவசாயம் முழுமையாக பாதிக்கும் அபாயம் உள்ளது. நிலங்கள் வீட்டுமனைகளாக மாறும்.இதனை தடுக்க, இங்குள்ள நீர் நிலைகளிலிருந்து நெல் விவசாயத்துக்கான தண்ணீரை நேரடியாக வினியோகிக்க அரசு புதிய திட்டங்களை செயல்படுத்த முன் வர வேண்டும்," என்றனர்.

## காலநிலை மாற்றத்தால் குறுமிளகு விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு

**பந்தலூர்** : "பந்தலூர், கூடலூர் பகுதிகளில் குறுமிளகு விளைச்சல் நடப்பு ஆண்டில் அதிகரிக்கும்' என, விவசாயிகள் நம்மிக்கை தெரிவித்துள்ளனர். நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூர் பகுதிகளில் உள்ள தேயிலை, காபி தோட்டங்களுக்கு மத்தியில் ஊடுபயிராக குறுமிளகு விளைவிக்கப்படுகிறது. "கருப்பு தங்கம்' என்றழைக்கப்படும் குறுமிளகின் விலை, நடப்பு ஆண்டில் அதிகரித்துள்ளது."சிறிய மிளகு கிலோவிற்கு 730 ரூபாய், வயநாடன் என்றழைக்கப்படும் பெரிய மிளகு 740 ரூபாய்' என, விற்பனை செய்யப்படுகிறது. சிறிய ரக குறுமிளகு கொச்சின் மார்க்கெட்டிற்கும், பெரிய மிளகு தமிழகம் மற்றும் வடமாநிலங்களுக்கு மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. பொதுவாக, டிசம்பர் முதல் ஜனவரி மாதம் முடியவுள்ள காலத்தில் அறுவடை செய்யப்படும் குறுமிளகு மே மாதம் மழை பெய்தவுடன் விளைச்சலுக்கு தயாராகும். கடந்த சில வாரங்களாக பெய்த மழையில், குறுமிளகு அறுவடைக்கு தயாரான நிலையில், தற்போது மழை குறைவானதால், மிளகு திரிகளில் காய்கள் காய்க்க துவங்கியுள்ளன. விவசாயிகள் கூறுகையில்," தற்போதுள்ள காலநிலை தொடர்ந்தால், நடப்பாண்டில் குறுமிளகு விளைச்சல் அதிகரித்து, நல்ல லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது' என, விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## பட்டு விழிப்புணர்வு சிறப்பு முகாம்

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த புளியம்பட்டி பஞ்சாயத்து பாப்பாரப்பட்டியில், பட்டு விழிப்புணர்வு முகாம் நடந்தது.

கிருஷ்ணகிரி தொழில் நுட்ப சேவை மைய உதவி பட்டு ஆய்வாளர் சீனிவாசுலு தலைமை வகித்தார். பட்டு ஆய்வாளர் செல்லப்பா முன்னிலை வகித்து, மண் பரிசோதனை செய்தல், இளம் புழு வளர்ப்பு மையம் அமைத்தல், தோட்டம் பராமரித்தல், சொட்டு நீர் பாசனம் அமைத்தல் போன்ற புதிய தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார். பட்டு வளர்ச்சி துறை மூலம் பட்டு விவசாயிகளுக்கு செயல்படுத்தப்படும், நல திட்டங்கள் குறித்தும், அரசு மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும், மானியங்கள் குறித்தும், புழு வளர்ப்பு மனை பராமரித்தல், வெண்பட்டு புழு வளர்ப்பு செய்தல், கிருமி நீக்கம் செய்தல் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து, கிருஷ்ணகிரி பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் வடிவேல் விளக்கி கூறினார். விழிப்புணர்வு முகாமில், பட்டு தொழிலில் ஈடுபடும் பட்டு விவசாயிகள் மற்றும் புதிய விவசாயிகள் ஆறு பெண்கள் உள்பட, 50க்கும் மேற்பட்ட மல்பரி விவசாயிகள் பங்கேற்றனர். தேவிரஅள்ளி சரக இளநிலை ஆய்வாளர் ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

## கம்பு விளைச்சல் அதிகரிப்பு: விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கம்பு விளைச்சல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 86 ஆயிரத்து, 450 ஹெக்டர் பரப்பில், சிறுதானிய பயிர்களான, கம்பு, ராகி, சோளம், ஆகியவை, சாகுபடி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி, பர்கூர், வேப்பனப்பள்ளி ஆகிய யூனியன்களில், மானாவாரியாக, சித்திரை பட்டத்தில், கம்பு, சோளம் பயிரிடப்படுகிறது. குறிப்பாக, கிருஷ்ணகிரி யூனியனில் உள்ள பூசாரிப்பட்டி, கரடிகுறி, கம்மம்பள்ளி, வென்னம்பள்ளி, சின்னேப்பள்ளி, வரட்டனப்பள்ளி, சின்ன மட்டராப்பள்ளி, எலுமிச்சங்கிரி, போச்சம்பள்ளி, புளியாண்டபட்டி, வாழைதோட்டம், கொடமாண்டபட்டி

உள்ளிட்ட, 25க்கும் மேற்பட்ட கிராமங்களில், கம்பு அதிகளவில் பயிரிடப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த மே மாதம், கடைசி வாரத்தில் இருந்து, பருவ மழை பெய்தது. அதனால், மாவட்டத்தில், 6,000 ஏக்கர் பரப்பில், கம்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், நாட்டு ரகங்களை விட, விளைச்சல் அதிகம் கொடுக்கும், ஐ.சி.எம்.வி., 221 என்ற வீரிய ஒட்டு ரக கம்பு, மாவட்டத்தில், அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது.

மே மற்றும் ஜூன் மாதங்களில், கம்பு பயிரிருக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை நிலவியதால், மகரந்த சேர்க்கை அதிகம் நடந்து, விளைச்சல் அதிகரித்துள்ளது. அதனால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தற்போது, கம்பு அறுவடை துவங்கியுள்ளது. கிருஷ்ணகிரி அடுத்த கம்மம்பள்ளி விவசாயி சிவன் கூறியதாவது: நான்கு ஆண்டுகளாக, கம்பு பயிரிட்டு வருகிறோம். எங்கள் கிராமத்தை சுற்றியுள்ள பலர், இரண்டு ஆண்டுகளை காட்டிலும், இந்த ஆண்டு, கூடுதல் பரப்பில் கம்பு பயிர் செய்துள்ளனர். சித்திரை பட்டத்தில் விதைத்த கம்புக்கு, தொடர்ந்து மழை பெய்து வந்ததால், தற்போது, நல்ல முறையில் வளர்ந்துள்ளது.

பொதுவாக, கம்பு பயிர்களை நோய்கள் தாக்காது என்பதால், மருந்து தெளிக்கும் செலவு இல்லை. தற்போது, ஒரு சில இடங்களில், கம்பு அறுவடை துவங்கியுள்ளது. ஏக்கருக்கு, 10 மூட்டை கம்பு கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளோம். ஒரு கிலோ கம்பு, 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனை, வெளி மாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள், போட்டி போட்டு வாங்குவதால், இந்த ஆண்டு, நல்ல லாபம் கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளோம். இவ்வாறு கூறினார்.

## டெல்டாவில் கன மழை

**தஞ்சாவூர்**: தஞ்சை மாவட்டத்தில், கோடை வெயிலின் தாக்கம் நீடித்து வருகிறது. சுட்டெரிக்கும் வெயிலுடன் அனல் காற்றும் சேர்ந்து, மாவட்ட மக்களை வாட்டி வதைத்து வருகிறது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு, 7 மணிக்கு மேகமூட்டத்துடன் சாரல் மழை பெய்யத் துவங்கியது. தொடர்ந்து, இடி,

மின்னலுடன் பலத்த மழை பெய்யத் துவங்கியது. இரண்டு மணி நேரம் வரை நீடித்த கன மழையால், தஞ்சை மாநகர் பகுதிகளில் மழைதண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

மழையுடன் சூறை காற்றும் வீசியதால் மாவட்டத்தின் பல பகுதிகளில், சாலையோரங்களில் நின்ற மரங்கள் வேருடன் சாய்ந்தது. சில பகுதிகளில் மின்கம்பி மீது மரங்கள் சாய்ந்ததால், மின்சாரம் துண்டிக்கப்பட்டு அப்பகுதிகள் இருளில் மூழ்கியது. தஞ்சை மாவட்டம் மட்டுமின்றி அருகில் உள்ள நாகை, திருவாரூர் மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்தது. குறுவை நெல் சாகுபடிக்கு இந்த மழை பயனளிக்கும் என்பதால், அம்மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தள்ளனர்.

## கால்நடை தீவன பயிர்கள் சாகுபடி,தஞ்சை விவசாயிகளுக்கு அழைப்பு

**தஞ்சாவூர்**: தஞ்சாவூர் மாவட்டத்தில், அரசு முழு மானியத்துடன் கால்நடை தீவன பயிர்கள் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் கால்நடைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் செல்வவிநாயகம் வெளியிட்டுள்ள அறிக்கை:

பால் உற்பத்தியை அதிகரித்து பசுமைப் புரட்சியை ஏற்படுத்தவும், கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்க்கவும் ஏதுவாக, தமிழக அரசு, 25 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தை அறிவித்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில், பசுந்தீவன புல், சோளம் மற்றும் காராமணி பயிர்கள், அகத்தி விதைகள், அசோலா பச்சை பாசி உள்ளிட்ட கால்நடை தீவனங்கள் சாகுபடி திட்டம் மற்றும் நீர் தெளிக்கும் உபகரணங்கள் வழங்கும் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட உள்ளது.

பசுந்தீவன புல், 200 ஏக்கரில் இறவை சாகுபடி மூலம் உற்பத்தி செய்வதென இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. பசுந்தீவன புல் உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகள், குறைந்தபட்சம், 25 சென்ட் நிலத்திலும், அதிகபட்சம் ஒரு ஏக்கர் நிலத்திலும் சாகுபடி செய்யலாம். 25 சென்ட் நிலத்தில் பசுந்தீவன புல் சாகுபடி

செய்ய, 2,000 ரூபாய் மானியமாக வழங்கப்படும். தண்ணீர் வசதியுடன் கூடிய நிலம் உள்ள, சிறு, குறு மற்றும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தீவனச் சோளம் மற்றும் காராமணி பயிர்கள், 200 ஏக்கரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏக்கருக்கு, 2,200 வீதம் மானியம் வழங்கப்படும். அதிக புரத சத்துள்ள அகத்தி பயிர்கள், 50 ஏக்கரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு, நான்கு கிலோ வீதம் அகத்தி விதைகள் முழு மானியத்தில் வழங்கப்படும். அசோலா பச்சை பாசி வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கு, முழு மானியத்தில் விதைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும். மேலும், கால்நடை தீவனங்கள் சாகுபடி செய்வோர்க்கு நீர் தெளிக்கும் உபகரணங்கள் வாங்க, 18 ஆயிரத்து, 750 ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

விரும்பம் உள்ளவர்கள், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் அலுவலகம் அல்லது அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## நெல் விளைச்சல் சரிவால் 14 அரிசி ஆலைகள் மூடல்

**தேனி** : நெல் விளைச்சல் சரிவால் தேனியில் மட்டும் 14 அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளன.

தேனியில் 21 அரிசி ஆலைகள் செயல்பட்டு வந்தன. இவர்கள் தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்து அரிசியாக்கி விற்பனை செய்து வந்தனர். ஒவ்வொரு அரிசி ஆலைகளிலும் 50க்கும் மேற்பட்டோர் வேலை செய்து வந்தனர்.இந்நிலையில், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நெல் விளைச்சல் வீழ்ச்சி அடைந்துள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து நெல் கொள்முதல் செய்வதில் அதிக செலவாகி விடுதாலும், கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறையாலும், மின்தட்டுப்பாட்டாலும் அரிசி மில்களுக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டு வந்தது. இதனால் இந்த மில்கள் படிப்படியாக மூடப்பட்டு வந்தன.

தற்போது ஏழு மில்கள் மட்டுமே தேனியில் உள்ளன. இந்த மில்களும் வங்கிகள் கடன் உதவியால் நெருக்கடியை தாக்குப்பிடித்து செயல்பட்டு வருகின்றன. வங்கிகள் கைவிரித்தால் இந்த மில்களையும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டு விடும், என நெல் அரிசி உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

## வறட்சியால் விளைச்சல் சரிவு; புடலங்காய் விலை அதிகரிப்பு

**தேனி**: வறட்சியால் விளைச்சல் சரிவடைந்துள்ளதால், மார்க்கெட்டில் கிராக்கி ஏற்பட்டு புடலங்காய் விலை கிலோ 28 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கம்பம் பள்ளத்தாக்கில் உத்தமபாளையம், ராயப்பன்பட்டி, காமயகவுண்டன்பட்டி, சின்னமனூர், ஓடைப்பட்டி, சுருளிப்பட்டி, சீலையம்பட்டி உள்ளிட்ட பல ஊர்களில் பரவலாக புடலங்காய் சாகுபடி செய்யப்படுகிறது. திராட்சை தோட்டங்களில் புதிய கொடி அமைக்கும் போதும், சீசன் முடிந்த இடைவெளிகளின் போதும் அதில் புடலை கொடி போடுவது வழக்கம். மற்ற காய்களை ஒப்பிடும் போது விலை குறைவாக இருப்பதால் இதன் பயன்பாடும் அதிகமாக இருக்கும். ஆண்டு முழுவதும் விளைச்சலில் இருக்கும் இந்த காயின் வரத்து எப்போதும் சீராக இருக்கும். இந்நிலையில் கடந்த ஆண்டு முழுவதும் மழை பெய்யாததால் இதன் விளைச்சல் மிகவும் குறைந்துள்ளது. ராயப்பன்பட்டி, அணைப்பட்டி, ஆனைமலையன்பட்டி, சுருளிப்பட்டி, ஓடைப்பட்டி உள்ளிட்ட ஊர்களில் விளைச்சல் குறைந்ததன் காரணமாக மார்க்கெட்டில் வரத்து குறைந்து விலை உயர்ந்துள்ளது. கடந்த ஒரு வாரமாக புடலங்காய் விலை கிலோ 28 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இவ்வளவு விலை கொடுத்தாலும், தரமான காய் கிடைப்பதில்லை.

தினமணி

## தமிழகம், புதுச்சேரியில் இன்று ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு

**சென்னை**

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் வியாழக்கிழமை(ஜுலை 3) மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

அதேபோல் வடக்கு உள் கர்நாடகம், கடலோர ஆந்திரம், தெலங்கானா மற்றும் ராயலசீமாவில் ஓரிரு இடங்களிலும், லட்சத்தீவு, தெற்கு உள் கர்நாடகத்தின் ஒரு சில இடங்களிலும், கேரளம், கடலோர கர்நாடகத்தில் அநேக இடங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை ஒரு சில இடங்களில் பெய்யும்.

அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 100 மற்றும் 82 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும் என்றும் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

மழை நிலவரம்: புதன்கிழமை காலையுடன் முடிந்த கடந்த 24 மணி நேரத்தில் தஞ்சை மாவட்டம் பாபநாசம், திருவாரூர் மாவட்டம் குடவாசலில் தலா 80 மி.மீட்டரும், திருவாரூரில் 70 மி.மீட்டரும், வலங்கைமானில் 60 மி.மீட்டரும், திருபுவனம், நீடாமங்கலம், சங்கராபுரம், திருவாரூர் மாவட்டம் பாண்டவையார், திருமனூர், சின்னகல்லார், சிவகங்கை ஆகிய இடங்களில் தலா 50 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

வெயில்: தமிழகத்தில் சென்னை, திருச்சி, மதுரை, அதிராம்பட்டினம், கரூர் பரமத்தி மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் புதன்கிழமை(ஜூலை 2) 100 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கும் அதிகமாக வெயில் பதிவாகியுள்ளது.

**குறைந்தபட்ச வெங்காய ஏற்றுமதி விலை அதிகரிப்பு**

புது தில்லி



வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு 500 டாலராக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

இதனால் உள்நாட்டு சந்தையில் வெங்காயம் தாராளமாகக் கிடைப்பதற்கு வழி ஏற்படும் எனவும், அதன் மூலம் வேகமாக அதிகரித்து வரும் வெங்காயத்தின் விலை கட்டுப்படுத்தப்படும் எனவும் நம்பப்படுகிறது.

மத்திய அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று திங்கள்கிழமை இந்த முடிவை எடுத்துள்ளது.

இதுகுறித்து அந்தக் குழு விடுத்துள்ள அறிக்கையில், ""வெங்காயத்தின் மொத்த மற்றும் சில்லறை விலைகள் உயர்ந்து வருவதைக் கருதியும், பருவ மழை தாமதமாவதைக் கருத்தில் கொண்டும், டன் ஒன்றுக்கு 300 டாலராக (சுமார்

ரூ.17,900) இருந்த அதன் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 500 டாலராக (சுமார் ரூ.29,800) உயர்த்தப்படுகிறது.

ஏற்கெனவே குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு 300 டாலராக நிர்ணயித்திருந்தபோது, வெங்காய ஏற்றுமதி எதிர்பார்த்த அளவு குறையவில்லை. அதனால் விலைவாசியும் கட்டுப்படவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது போதிய அளவில் வெங்காய வரத்து இருந்தாலும், இந்த ஆண்டு பருவ மழை பொய்க்கும் என்ற யூகத்தின் அடிப்படையில், அதன் விலை வேகமாக உயர்ந்து வருகிறது.

ஆசியாவிலேயே மிகப்பெரிய வெங்காயச் சந்தையான மகாராஷ்டிரத்தின் லாசல்காவ்னில், கடந்த ஜூன் மாதத்தில் ஒரு கிலோ வெங்காயத்தின் விலை ரூ.18.50-லிருந்து ரூ.80-ஆக அதிகரித்தது.

**<u>அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.1.25 கோடிக்கு பருத்தி ஏலம்</u>**

**பவானி**,

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் புதன்கிழமை ரூ.1.25 கோடிக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.

தற்போது பருத்தி அறுவடைக் காலம் என்பதால், இங்கு பருத்தி ஏலம் திங்கள்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. வியாபாரிகள் வராததால் புதன்கிழமைக்கு ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

விவசாயிகள் பிடி ரக பருத்தியினை சுமார் 6 ஆயிரம் மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். குவிண்டால் ரூ.4,950 முதல் ரூ.5,220 வரையில் வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர். மொத்த வர்த்தகம் ரூ.1.25 கோடிக்கு நடைபெற்றது. வரும் வாரங்களில் பருத்தி வரத்து மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**விவசாயிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனைக் கூட்டம்**

**கமுதி**,

கமுதி பகுதி விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கும் கூட்டம், புதன்கிழமை நடைபெற்றது. கமுதி வட்டார வேளாண் விரிவாக்க அலுவலகம் ஏற்பாட்டில், இந்த கூட்டம், வட்டார வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் முனைப்பு அலுவலர், எஸ்.எம். உதுமான் முகைதீன் தலைமையில் நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குநர் சக்கரவர்த்தி, வேளாண் உதவி பொறியாளர் மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர் ஜெயசந்திரா வரவேற்றார். கூட்டத்தில் வேளாண் தொழில் உயர் அலுவலர்கள், நுட்ப மேலாளர் ஈஸ்வரி, வல்லுனர்கள் மலர், தேன் மொழி உள்ளிட்டோர் 2013-2014ஆம் ஆண்டுக்குரிய நவீன வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முதன்மை செயல் திட்டப் பணிகள் குறித்து விளக்கினர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவி இயக்குநர் ஆலோசனையில் வட்டார வேளாண் அலுவலர்கள், அலுவலக உதவியாளர் கதிரேசன் உள்ளிட்டோர் கவனித்தனர்.

**சிமா பருத்தி விதை அறிமுகக் கூட்டம்**

**குடியாத்தம்**

குடியாத்தம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் சார்பில் தென்னிந்திய பஞ்சாலைகளின் பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக் கழகத்தின் பருத்தி விதை (சிமா) அறிமுகக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் ஜே.கே.என்.பழனி தலைமை வகித்தார். சிமா நிறுவன விழுப்புரம் பொறுப்பு அலுவலர் ஆர்.கோவிந்தராஜ் வரவேற்றார்.

உதவி வேளாண்மை இயக்குநர் ஈ. ராஜேஸ்வரி, விரிஞ்சிபுரம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பி. ஸ்ரீதர், கோவை சிமா நிறுவன தொழில்நுட்ப அலுவலர் எம். பார்த்திபன், ஆத்மா தலைவர் எம். நாகராஜன் ஆகியோர் பருத்தி விதையை அறிமுகம் செய்து வைத்துப் பேசினர். பருத்தி சந்தை விவரம் குறித்து சங்கச் செயலர் கே.முத்துராமன், வேளாண் அலுவலர் கே.ராஜேந்திரன் ஆகியோர் பேசினர்.

சேங்குன்றம் ஊராட்சி மன்றத் தலைவர் நாகவேணி சொக்கலிங்கம், முன்னாள் தலைவர் வி.செல்வராஜ், சங்க இயக்குநர்கள் அனிதா மதியழகன், ராஜேந்திர ஆச்சாரி, ராமாலை ராஜா, உதவி வேளாண்மை அலுவலர் வ.ஜெயபாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நீர்வடி மேம்பாடு சங்கத்தைச் சேர்ந்த கே.கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**போளூர்,**

போளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட வழங்கல் அலுவலர் கிருபானந்தம் தலைமை வகித்தார். கூட்டத்தில் விவசாயிகள் பேசுகையில், தகுதியில்லாத நபர்கள் அரசு சலுகைகளை பெறுகின்றனர், போளூர் தாலுகா அளவில் பயிர்களைப் பார்த்து வறட்சி நிவாரணமாக அரசு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

**பயிர் மதிப்பீட்டு ஆய்வுகள் குறித்து களப் பணியாளர்களுக்கு பயிற்சி**

**நாமக்கல்**

பயிர் மதிப்பீட்டு ஆய்வுகள், பயிர் அறுவடைப் பரிசோதனை மேற்கொள்வது குறித்து களப் பணியாளர்களுக்கு புத்தூட்டப் பயிற்சி நாமக்கல்லில் புதன்கிழமை தொடங்கியது.

நாமக்கல் மாவட்ட பொருளியல், புள்ளியியல் துறை சார்பில், 2014-15-ஆம் ஆண்டுக்கான பயிர் மதிப்பீட்டு ஆய்வுத் திட்டத்தின் கீழ், இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது. இரு நாள்கள் நடைபெறும் பயிற்சியை மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தொடக்கிவைத்துப் பேசியது:

தமிழகத்தில் நெல், சிறுதானியங்கள் (சோளம், கம்பு, கேழ்வரகு), வேர்கடலை, எள், சூரியகாந்தி, கரும்பு, பருத்தி, துவரை, உளுந்து, பாசிபயிறு ஆகிய பயிர்களின்

சராசரி (ஒரு ஹெக்டேருக்கு) விளைச்சலையும், மொத்த உற்பத்தியையும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் துல்லியமாக கணித்திட ஆண்டுதோறும் புள்ளியியல் துறை பயிர் மதிப்பீட்டு ஆய்வுகளை நடத்தி வருகிறது.

உணவு உற்பத்தி, பொருளியல் திட்டமிடல், பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட அரசின் திட்டமிடலுக்கு இந்தப் பயிர் மதிப்பீட்டு ஆய்வுத் திட்டம் மிக முக்கியமானதாகும்.

பயிர் அறுவடை பரிசோதனைகள் சிறப்பாக மேற்கொள்ள வருவாய் துறை, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறைகளின் பொறுப்பு இன்றியமையாததாகும்.

புதுதில்லி தேசிய மாதிரி ஆய்வு நிறுவன இயக்குநரின் தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ், இந்தப் பயிர் மதிப்பீட்டு ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. பயிர் மதிப்பீட்டு ஆய்வு திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை ஆராய்ந்து, தொகுத்து, பகுத்தாய்வு செய்து விளைச்சல் விவரங்களை கணித்து அவற்றை மத்திய, மாநில அரசுகளுக்கும், மற்ற துறைகளுக்கும் அனுப்புதல் ஆகிய பணிகளும் புள்ளியியல் துறை தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் புள்ளி விவரம் உணவு, பணவீக்கத்தை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கு பயன்படுகிறது.

எனவே, இந்தப் பயிற்சியில் பங்கேற்றுள்ள களப் பணியாளர்கள் பயிற்சியில் தெரிவிக்கும் அறிவுரைகள், குறிப்புகளை அறிந்து பயிர் மதிப்பீட்டு ஆய்வுகளையும் அறுவடைப் பரிசோதனைகளை நல்ல முறையில் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

முதல் நாளில், களப் பணியாளர்களுக்கு பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்வது குறித்த பயிற்சியும், இரண்டாம் நாளில் தும்மங்குறிச்சி கிராமத்தில் களப்பணி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

பயிற்சி முகாமில், கோவை மண்டல புள்ளியியல் இணை இயக்குநர் ஆர்.நந்தகுமார், நாமக்கல் மாவட்ட புள்ளியியல் துணை இயக்குநர் ஜி.கோபால்சாமி மனோகரன், வேளாண் இணை இயக்குநர் கே.தமிழ்ச்செல்வன்,

தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் ஏ.மணிவண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>கரும்பு டன்னுக்கு ரூ.3,500 கொள்முதல் விலை வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்</u>**

**நாமக்கல்**

கரும்பு டன்னுக்கு ரூ.3,500 கொள்முதல் விலை வழங்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, மோகனூர் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த சங்கத்தின் 31-ஆவது ஆண்டுப் பேரவைக் கூட்டம் சங்கத் தலைவர் எஸ்.பி.கந்தசாமி தலைமையில் மோகனூரில் நடைபெற்றது. சங்கத்தின் பொதுச் செயலாளர் வழக்குரைஞர் என்.கே.நடராசன், வரவு, செலவு கணக்குகளைச் சமர்ப்பித்தார். தொடர்ந்து, சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதன்படி, புதிய தலைவராக எஸ்.பி.காந்தசாமி, பொதுச் செயலாளராக வழக்குரைஞர் என்.கே.நடராசன், பொருளாளராக வீ.ஸ்ரீதரன், துணைத் தலைவர்களாக டி.பி.எட்டிக்கன், டி.என்.எஸ்.ராமசாமி, துணைச் செயலாளர்களாக கே.கனகராஜ், சி.பி.நவலடி ஆகியோர் தேர்வுசெய்யப்பட்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

2014-15-ஆம் அரவை ஆண்டுக்கு கரும்பு டன்னுக்கு ரூ.3,500 கொள்முதல் விலையை மத்திய, மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும். சர்க்கரை ஆலை அங்கத்தினருக்கு பங்கு மூலதனத்துக்கு சட்டப்படி டிவிடெண்ட் கணக்கிட்டு விரைவில் வழங்க தமிழக அரசு உத்தரவிட வேண்டும்.

ஆண்டுதோறும் விவசாயிகள் விநியோகித்த கரும்பு டன்னுக்கு ஒரு கிலோ சர்க்கரையும், ஆலை சங்கத்தினர் பங்கு மூதலனம் ஒன்றுக்கு 2 கிலோ சர்க்கரையும் மானிய விலையில் வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு விதை கரணை மானிய விலையில் வழங்க வேண்டும்.

ஆலை கரும்பு உதவியாளர்கள் தவறாமல் விவசாயிகளைச் சந்தித்து கரும்பு பயிர்களை நேரடியாகப் பார்வையிட வேண்டும்.

ராஜா, பொய்யேரி, குமாரபாளையம், மோகனூர் வாய்க்கால்களில் மார்ச் 1-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை ஆண்டுக்கு 15 நாள்கள் மட்டுமே தண்ணீர் நிறுத்தப்படும். ஆனால், நிகழாண்டு எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் தண்ணீர் திடீரென நிறுத்தப்பட்டு சுமார் ஆறரை கோடி ரூபாய் அளவில் கான்கிரீட் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, 60 நாள்களுக்கு மேலாக தண்ணீர் இல்லாததால் கரும்பு, நெல், வாழை, வெற்றிலை முதலிய விவசாய பயிர்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. இதற்கு மாவட்ட நிர்வாகம், பொதுப் பணித் துறை அதிகாரிகளின் மெத்தனமே காரணமாகும். வரும் காலங்களில் 15 நாள்களுக்கு மேல் இந்த வாய்க்கால்களில் தண்ணீர் நிறுத்தாமல் இருக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை லாபத்தில் இயங்க விவசாய சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலை நிர்வாகம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பன உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**<u>ஆத்தூர் எண்ணெய் ஆலையில் ஆய்வு</u>**

**ஆத்தூர்,**

சேலம் மாவட்டம், ஆத்தூரில் எண்ணெய் ஆலையில் மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் மருத்துவர் டி.அனுராதா புதன்கிழமை ஆய்வு நடத்தினார்.

ஆத்தூரில் உள்ள எண்ணெய் ஆலைகளில் இருந்து தயார் செய்யப்பட்டு, விற்பனைக்கு அனுப்பப்படும் பாக்கெட்டுகளின் மீது சமையல் எண்ணெய் என்று குறிப்பிடப்படுவதாக மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை அலுவருக்குப் புகார் சென்றது. இதையடுத்து, உணவுப் பாதுக்காப்புத் துறை நியமன அலுவலர்

மருத்துவர் டி.அனுராதா ஆத்தூர் முல்லைவாடி பகுதியில் உள்ள தனியார் எண்ணெய் ஆலையில் ஆய்வு நடத்தினார்.

அப்போது, பாக்கெட்டுகளில் அடைக்கப்படும் எண்ணெய்யின் பெயர்களை மட்டுமே அதில், குறிப்பிட வேண்டும். சமையல் எண்ணெய் என்று பாக்கெட்டுகளின் மீது குறிப்பிடக்கூடாது என்று அவர் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, உணவுப் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் ஏ.புஷ்பராஜ், என்.சுந்தர்ராஜ், இ.கோவிந்தராஜ், எம்.முனுசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

**<u>தழைச்சத்து உரங்களை சமச்சீராக பயன்படுத்த வேளாண் அதிகாரி யோசனை</u>**

**அரியலூர்,**

விவசாயிகள் தழைச்சத்து உரங்களை சமச்சீராகப் பயன்படுத்த வேண்டும் என யோசனை தெரிவித்துள்ளார் அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குணசேகரன்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வேளாண்மைத் துறையின் சார்பில் அண்மையில் நடைபெற்ற உர விழிப்புணர்வு முகாமுக்கு தலைமை வகித்து அவர் பேசியது: அரியலூர் மாவட்ட டெல்டா பகுதி விவசாயிகள் நெற்பயிருக்கு உரங்களை தேவையான அளவு உரிய தருணத்தில் இடவேண்டும். அதிலும், உரங்களைவிட தழைச்சத்து உரம் குறைந்த விலையில் கிடைப்பதால், அதை அதிக அளவில் பயிருக்கு இடுவதை தவிர்த்து சமச்சீர் அளவில் உரத்தை பயிருக்கு இடவேண்டும். மேலும், நீரில் கரையும் உரங்களையும் பாசனநீர் மூலம் அளித்து உரங்களை வீணாக்காமல் பயன்படுத்துவதோடு, உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் கம்போஸ்ட் உரங்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்றார் அவர்.நிகழ்ச்சியில், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) முரளிதரன் பேசுகையில் தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்களை 4:2:1 என்ற விகிதத்தில் பயன்படுத்த வேண்டும். ஆனால், தழைச்சத்து உரம் தற்போது 16 பங்கு அதிகமாக பயன்படுத்துவதாலும், உரங்களை சமச்சீராக பயன்படுத்தாத காரணத்தாலும் பயிர்களில் பூச்சி தாக்குதல்

மற்றும் சுற்றுச்சூழல் கேடு ஏற்படுகிறது. எனவே, விவசாயிகள் மண் மாதிரி செய்து அதற்கேற்றவாறு உரம் இடவேண்டும். அதிக அளவில் இயற்கை மற்றும் பசுந்தாள் உரங்களை பயன்படுத்த வேண்டும் என்றார்.

வேளாண் அலுவலர் செல்வகுமார் உர உபயோகம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விளக்கினார். நிகழ்ச்சியில், ஒன்றியக் குழுத் தலைவர் சீனிவாசன், தனியார் உர விற்பனை நிறுவனத்தைச் சேர்ந்த ஜெகநாதன், சதீஸ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கால்நடைத் தீவன உற்பத்திசெய்வோருக்கு மானியம்**

**புதுக்கோட்டை**

கால்நடை தீவன உற்பத்தி செய்ய முன் வருவோருக்கு அரசு மானியம் அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட தகவல்:

மாவட்டத்தில் கால்நடைத் தீவன உற்பத்தி செய்வோருக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது. அதில் இறவையில் கோ-3, கோ-4 புல் ரகம் பயிரிட 0.25 ஏக்கர் சாகுபடி செய்ய ரூ. 2 ஆயிரம் மானியம் வழங்கப்படும். அதிகபட்சம் 1 ஏக்கர் சாகுபடி செய்யலாம்.

மேலும், மானாவாரிப் பகுதிக்கு சோளம் மற்றும் தட்டைப்பயிறு தீவன உற்பத்தி செய்ய 0.25 ஏக்கருக்கு ரூ. 550 மானியம் வழங்கப்படுகிறது.

அதிகபட்சமாக 1 ஏக்கர் சாகுபடி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் நீர்ப்பாசனப் புல் சாகுபடியாளர்களுக்கு நீர்த்தெளிப்பான் ரூ. 25 ஆயிரம் விலையில் 75 சதவிகித மானியத்தில் வழங்கப்படும்.

அசோலா சாகுபடி செய்ய ஒரு பயனாளிக்கு ரூ. 1600 வழங்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் கால்நடைகள் வைத்திருப்பவராக இருக்க வேண்டும். மேலும், இத்தகைய பயனை ஏற்கெனவே

பெறாதவர்களாக இருக்க வேண்டும். இறவைப் புல் சாகுபடி செய்பவர்கள் நீர்ப்பாசன வசதியுடன் கூடிய நிலமுள்ளவராக இருக்க வேண்டும்.

நீர் தெளிப்பான் பெற விரும்புவர்கள் ஏற்கெனவே கோ-3, கோ-4 சாகுபடி செய்தவர்களாகவும் இருக்க வேண்டும். அகத்தி சாகுபடி செய்ய விருப்பமுள்ள நபர்களுக்கு அதற்கான விதை இலவசமாக வழங்கப்படும்.

**<u>வேதாரண்யம் பகுதியில் சூறைக்காற்றுடன் மழை</u>**

**வேதாரண்யம்**

நாகை மாவட்டம், வேதாரண்யம், தலைஞாயிறு பகுதியில் செவ்வாய்கிழமை இரவு இடி, மின்னல், சூறைக்காற்றுடன் மழை பெய்தது. இதில் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட 2 தொகுப்பு வீடுகள் இடிந்தன.

வேதாரண்யம் பகுதியில் கடந்த சில நாள்களாகவே மேற்கு மற்றும் தென்மேற்கு திசையில் இருந்து பலத்த கடல் காற்று வீசி வருகிறது. காற்றில் எழும் புழுதி மணல் மற்றும் வெப்பத்தின் தாக்கத்தாலும் மக்கள் அவதியுற்று வருகின்றனர். இந்நிலையில், செவ்வாய்க்கிழமை இரவு பெய்த லேசான மழை ஆறுதலாக உள்ளது.

புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் வேதாரண்யத்தில் 13.4 மி.மீ., தலைஞாயிறு- 52.2 மி.மீ. மழை பதிவானது.

செவ்வாய்க்கிழமை இரவு சூறைகாற்றுடன் பெய்த மழையின்போது ஆறுகாட்டுத்துறை மீனவர் காலனியில் உள்ள சேதுபதி, மணிவண்ணன் ஆகியோருக்கு அரசால் கட்டிக்கொடுக்கப்பட்ட 2 தொகுப்பு வீடுகளும் இடிந்து விழுந்து தரைமட்டமானது.

**<u>பண்ணைக் குட்டையில் மீன் வளர்ப்பு முறைகள்:3 நாட்கள் பயிற்சி</u>**

**நாகப்பட்டினம்,**

நாகை மீன்வளத் தொழில்நுட்ப நிலையம் சார்பில் பண்ணைக் குட்டையில் மீன் வளர்ப்பு முறைகள் குறித்த 3 நாள் பயிற்சி முகாம் ஜூலை 9-ம் தேதி தொடங்குகிறது.

இதுகுறித்து நாகை மீன்வளத் தொழில்நுட்ப நிலையத்திலிருந்து வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஹைதராபாத் தேசிய மீன்வள மேம்பாட்டுக்கழக நிதி உதவியுடன், நாகை மீன்வளத் தொழில்நுட்ப நிலையத்தில் பண்ணைக் குட்டையில் மீன்வளர்ப்பு முறைகள் குறித்த 3 நாள் இலவசப் பயிற்சி முகாம் ஜூலை 9-ம் தேதி தொடங்கி ஜூலை 11-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சி முகாமில் நாகை மற்றும் கீழ்வேளூர் பகுதிகளைச் சேர்ந்த பண்ணைக் குட்டை விவசாயிகள் முன்பதிவுப் பெற்றுப் பங்கேற்கலாம். முதலில் வரும் 30 பேருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பண்ணைக் குட்டை மீன்வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்த விளக்கங்கள், செயல் விளக்கத்துடன் விளக்கப்படும். பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு ஊக்கத் தொகை, தொழில்நுட்ப கையேடு, சான்றிதழ் ஆகியன வழங்கப்படும்.பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர்கள், தாங்கள் பண்ணைக் குட்டைகள் அமைத்ததற்கான ஆதார நகலுடன் அஞ்சல் மூலமாக அல்லது நேரடியாக நாகை முதலாம் கடற்கரை சாலையில் இயங்கும் மீன்வளத் தொழில் நுட்ப நிலையத்தை தொடர்பு கொள்ளலாம்.

## பயிர்க் கடன் முகாம்: 2 நாட்களில் ரூ. 2.18 கோடி கேட்டு 493 விண்ணப்பங்கள்

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பயிர்க்கடன் வழங்கும் முகாமில் கடந்த 2 நாட்களில் ரூ. 2.18 கோடி பயிர்க் கடன் கேட்டு 493 விண்ணப்பங்கள் வந்துள்ளன என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஜூலை 1 முதல் 21-ம் தேதி வரை பயிர்க்கடன் வழங்கும் முகாம் நடைபெற்று வருகிறது. அதன்படி, பூலாம்பாடியில் புதன்கிழமை நடைபெற்ற பயிர்க் கடன் வழங்கும் முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட

ஆட்சியர் கூறியது: பயிர்க்கடன் வழங்கும் முகாம்களில் விவசாயிகள் பயிர்க்கடன் பெற தேவையான கணினி சிட்டா, அடங்கல் ஆகியவை முகாம் நடைபெறும் பகுதிகளிலேயே வருவாய்த் துறை அலுவலர்களால் வழங்கப்படும். மேலும், விவசாயிகள் வசிக்கும் பகுதிக்குள்பட்ட தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் கடன் நிலுவை இல்லையெனில், அதற்கான கடன் இல்லா சான்று வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் நடைபெற்ற முகாம்களில் சுமார் ரூ. 2.18 கோடி பயிர்க் கடன் கேட்டு 493 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

3-ம் தேதி எளம்பலூர், மேலப்புலியூர் (கி), பெருமத்தூர் (வ), பென்னகோணம் (தெ), பரவாய் (மே), தொண்டபாடி, செ.மாவிலங்கை, காரை (மே), பூலாம்பாடி (மே), நூத்தப்பூர் (வ), அனுக்கூர் ஆகிய கிராமங்களில் முகாம் நடைபெற உள்ளது. 4-ம் தேதி செங்குணம், மேலப்புலியூர் (மே), பெருமத்தூர் (தெ), ஆண்டிக்குரும்பலூர், வடக்கலூர், பரவாய் (கி), ஆதனூர் (வ), சிறுவயலூர், தெரணி, வெங்கனூர், பில்லங்குளம், பிரம்மதேசம் ஆகிய கிராமங்களில் முகாம் நடைபெறுகிறது.

7-ம் தேதி துறைமங்கலம், லாடபுரம் (மே), சிறுமத்தூர், ஒகளூர் (மே), எஸ்.ஆடுதுறை, புதுவேட்டக்குடி, ஆதனூர் (தெ), நக்கசேலம், புது அம்மாபாளையம், அயனாபுரம், தழுதாழை, கை.களத்தூர் (மே), மேட்டுப்பாளையம் (தெ) ஆகிய கிராமங்களிலும் பயிர்க் கடன் வழங்கும் முகாம்கள் நடைபெற உள்ளன. எனவே, பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இந்த வாய்ப்பை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

## குறுவை சாகுபடி: விவசாயக் குழுக்களுக்குப் பயிற்சி

**சிதம்பரம்,**

காவிரி டெல்டா வட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 20 விவசாயக் குழுக்களுக்கான பயிற்சிக் கூட்டம் சிதம்பரத்தில் உள்ள பரங்கிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவிஇயக்குநர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

டெல்டா வட்டாரங்களில் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தில் குறுவை சாகுபடி செய்யும் கிராமங்களில் விவசாயக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும்.

பதிவு செய்யப்படும் குழுக்களுக்கு 100 சதவீத மானியத்தில் ரூ.2 லட்சம் மதிப்பிலான இயந்திர நடவுக் கருவியும், ரூ. 30 ஆயிரம் மதிப்பிலான களை மடக்கும் கருவியும் வழங்கப்படவுள்ளது.

கடலூர் மாவட்ட டெல்டா வட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 20 விவசாய குழுக்களுக்கு ஒரு குழுவுக்கு 2 பொறுப்பாளர்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சி கூட்டத்திற்கு கடலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் தனசேகரன் தலைமை வகித்துப் பேசினார். குமராட்சி வட்டார வேளாண் உதவி இயக்குநர் விஜயகுமார் வரவேற்றார். துணை இயக்குநர் (திட்டங்கள்)க.இளங்கோ முன்னிலை வகித்து பயிற்சியை தொடங்கி வைத்தார்.

வேளாண் பொறியியல் துறை இளநிலை பொறியாளர் நாகநாதன் நடவு கருவி, களை மடக்கும் கருவிகளை பயன்படுத்துவது குறித்து பயிற்சி அளித்தார்.

விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியை வேங்கடலட்சுமி கருவிகளின் பயன்பாடு பற்றிய உழவியல் நுணுக்கங்கள் குறித்து பயிற்சி அளித்தார்.

தமிழ்நாடு நீர்வடிநிலப் பகுதி மேம்பாடு திட்ட அலுவலர் சுகுணா, விவசாயக் குழுக்கள் அமைப்பது, பதிவேடுகள் பராமரிப்பு, வங்கிக் கடன் பெறுதல், உறுப்பினர்களுக்கு கடன் அளித்தல் உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளித்தார். பரங்கிப்பேட்டை வட்டார வேளாண் உதவிஇயக்குநர் சு.ரமேஷ் நன்றி கூறினார்.

**<u>தில்லியில் புழுக்கத்தைத் தணித்த மழை!</u>**

**புது தில்லி**

தலைநகர் தில்லியில் புதன்கிழமை காலையில் பெய்த மழையால் நகரில் புழுக்கம் குறைந்தது. இதனால், தில்லிவாசிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கடந்த வாரத் தொடக்கத்தில் இருந்தே தில்லியில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ்ுக்கு கீழே இருந்து வருகிறது. இருப்பினும் கடந்த 3 நாள்களாக புழுக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. இதனால், பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வந்தனர். இந் நிலையில், புதன்கிழமை காலையிலிருந்தே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து, காலையிலும், பிற்பகலிலும் நகரின் பல்வேறு இடங்களில் லேசான மழை பெய்தது. இதனால், வெப்பநிலை குறைந்ததுடன் புழுக்கத்தின் தாக்கமும் குறைந்தது. குறைந்தபட்ச வெப்பநிலையாக 2 டிகிரி குறைந்து 25.5 டிகிரி செல்சியஸாகவும், அதிகபட்சம் 36.6 டிகிரி செல்சியஸாகவும் பதிவாகியிருந்தது. காற்றில் ஈரப்பதம் காலை 8.30 மணி நிலவரப்படி 70 சதவீதமாக இருந்தது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. செவ்வாய்க்கிழமை அதிகபட்ச வெப்பநிலை 35.2 டிகிரி செல்சியஸாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 28.5 டிகிரி செல்சியஸாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னறிவிப்பு: வியாழக்கிழமை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. குறைந்தபட்ச வெப்பநிலை 26 டிகிரி செல்சியஸாகவும், அதிகபட்ச வெப்பநிலை 36.6 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## விலை உயர்வை கட்டுப்படுத்த வெங்காய ஏற்றுமதி விலை அதிகரிப்பு மத்திய அரசு நடவடிக்கை



**புதுடெல்லி**

நாட்டில் வெங்காய உற்பத்தி இந்த ஆண்டு 192 லட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்த ஆண்டை (168 லட்சம் டன்) விட அதிகமாகும். இவ்வாறு போதுமான அளவு வெங்காய உற்பத்தி இருந்த போதிலும், பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாது என்று கூறப்படுவதால், வெங்காய விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

டெல்லியில் ஒரு கிலோ வெங்காம் ரூ.25 முதல் ரூ.30 வரை சில்லறை விலைக்கு விற்கப்படுகிறது. அதே நேரம் மொத்த விலை ரூ.18.50 என நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

எனவே தொடர்ந்து உயர்ந்து வரும் மொத்த மற்றும் சில்லறை விலையை கட்டுப்படுத்தவும், உள்நாட்டு வினியோகத்தை பெருக்கவும், பருவமழை தாமதமாவதை கருத்தில் கொண்டும் வெங்காயத்தின் ஏற்றுமதி விலையை

அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்தது. இது தொடர்பாக கடந்த 30-ந்தேதி அமைச்சக அதிகாரிகளின் ஆலோசனை கூட்டம் நடந்தது.

இதில் வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு 500 டாலராக (சுமார் ரூ.30 ஆயிரம்) அதிகரிப்பது என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஒரு கிலோ வெங்காயத்தின் ஏற்றுமதி விலை ரூ.30 ஆக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. முன்னதாக புதிதாக பதவியேற்ற மத்திய அரசு வெங்காய ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு 300 டாலராக கடந்த ஜூன் மாதம் 17-ந் தேதி நிர்ணயித்தது குறிப்பிடத்தக்கது.

**<u>பட்டுப்புழு வளர்ப்பு தொழிலுக்கு அரசு ஊக்கமளிக்கிறது துறை இயக்குனர் பிரபாகரன் பேச்சு</u>**



பட்டுப்புழு வளர்ப்பு தொழிலுக்கு அரசு ஊக்கம் அளிப்பதாக பட்டுப்புழு வளர்ப்புத்துறை இயக்குனர் எஸ்.பிரபாகரன் கூறினார்.

பட்டுப்புழு வளர்ப்புத்தொழில் கண்காட்சி

பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். அதையொட்டி பட்டுப்புழு வளர்ப்புத்துறை சார்பில்

மாவட்டந்தோறும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம், கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடலூர் பீச் ரோட்டில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் பட்டுப்புழு வளர்ப்பு கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதற்கு மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் தலைமை தாங்கினார். பட்டு வளர்ப்புத்துறை இயக்குனர் எஸ்.பிரபாகரன் கலந்து கொண்டு பேசியதாவது:-

ஏக்கருக்கு 10,500 ரூபாய் மானியம்

தமிழகத்தில் 32 ஆயிரம் ஏக்கரில் 20 ஆயிரம் விவசாயிகள் மல்பரிசெடி வளர்த்து பட்டுப்புழு வளர்ப்புத்தொழிலை மேற்கொள்கிறார்கள். கடலூர் மாவட்டத்தில் 100 ஏக்கரில் 57 விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்புத்தொழில் செய்கிறார்கள்.பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக ஏக்கருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாயை மானியமாக அரசு வழங்குகிறது. முன்பு பட்டுப்புழு வளர்க்கும் விவசாயிகளுக்கு பட்டுப்புழுவின் முட்டைகளை வழங்கி வந்தோம். இப்போது 17 நாள் வளர்ச்சியடைந்த பட்டுப்புழுக்களை வழங்குகிறோம்.

விவசாயிகளுக்கு பயிற்சி

கடலூர் மாவட்டம் கொஞ்சம் வெப்பமான மாவட்டமாக இருப்பதால் வீடு போல் கூடாரம் அமைத்துதான் பட்டுப்புழு வளர்க்க வேண்டியுள்ளது. எனவே 1,500 சதுர அடி பரப்பளவுள்ள கூடாரம்(ஷெட்) அமைக்க 82 ஆயிரத்து 500 ரூபாயும், 1000 சதுர அடி அளவுள்ள கூடாரங்கள் அமைக்க 87ஆயிரத்து 500 ரூபாயும் மானியமாக அரசு வழங்குகிறது. ஓசூரில் உள்ள பட்டுப்புழு வளர்ப்பு மையத்தில் விவசாயிகளுக்கு பயிற்சியும், பட்டுப்புழு முட்டைகளும் வழங்கப்படுகிறது. எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்புத்துறை உதவி இயக்குனரை அணுகலாம்.இவ்வாறு எஸ்.பிரபாகரன் கூறினார்.

கூட்டத்தில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**<u>கடும் வறட்சியால் தாளவாடி மலைப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட கரும்பு கருகும் அபாயம்</u>**



**சத்தியமங்கலம்,**

கடும் வறட்சியால் தாளவாடி மலைப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட கரும்பு கருகும் அபாயம் உள்ளது.

<u>கரும்பு சாகுபடி</u>

சத்தியமங்கலம் அருகே உள்ளது தாளவாடி மலைப்பகுதி. இந்த பகுதிகளில் பணப்பயிர்களான கரும்பு, வாழை, புகையிலை ஆகியவை சாகுபடி செய்யப்படுவது வழக்கம். கடந்த 2 வருடத்துக்கு முன்பு நல்ல மழை பெய்ததால் விவசாயிகள் தாளவாடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்தனர். இதற்கு ஆழ்குழாய் கிணற்று நீரை பயன்படுத்தி வந்தனர்.

இந்தநிலையில் கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை சரியாக பெய்யாததால் ஆழ்குழாய் கிணறு வறண்டு போனது. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துவிட்டது. முன்பு 350 அடியில் ஆழ்குழாய் மூலம் நல்ல தண்ணீர் கிடைத்தது. ஆனால் தற்போது சுமார் ஆயிரம் அடி ஆழ்குழாய் போட்டாலும் தண்ணீர் வருவதில்லை.

அப்படியே கிடைத்தாலும் அந்த தண்ணீரும் 2 அல்லது 3 மாதங்களுக்கு பிறகு வற்றிப்போய் விடுகிறது. இதனால் விவசாயிகள் தற்போது தக்காளி, அவரை, வெங்காயம் போன்ற சிறு பயிர்களையே பயிர் செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது.

கருகும் நிலை

இதுகுறித்து தாளவாடி பகுதி விவசாயிகள் கூறும்போது, ‘‘தாளவாடி, கும்டாபுரம், தொட்டகாச்சனுார், சூசைபுரம், திகினாரை, ஆகிய பகுதிகளில் கிணற்று நீரை நம்பி ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டதாலும், மழை சரியாக பெய்யாததாலும் வறட்சி ஏற்பட்டு கடந்த 2 மாதங்களாக பயிர்கள் காய்ந்து கருகி கொண்டு இருக்கிறது. குளம், குட்டை தூர்வாரப்படாமல் உள்ளதால் மழை பெய்தாலும் தண்ணீர் கர்நாடகா மாநிலத்தில் உள்ள சிக்கோலா அணையில் சென்று கலக்கிறது. இதே நிலைமை தொடர்ந்தால் தாளவாடி பகுதியில் விவசாயமே செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படும்.

எனவே குளம் குட்டைகளை தூர்வார வேண்டும். ஆங்காங்கே சிறிய சிறிய தடுப்பணைகள் கட்ட வேண்டும். தாளவாடி பகுதி மற்றும் சுற்றுவட்டார பகுதிகள் முன்பு எவ்வளவு பசுமையாக இருந்ததோ அதை தற்போது பார்க்க முடிவதில்லை. மழை காலத்தில் தண்ணீரை சேமித்து வைக்க அரசு தாமாகவே முன்வந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றனர்.

**பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்க ரூ.1½ கோடி மானியம் கலெக்டர் சண்முகம் தகவல்**



**ஈரோடு,**

பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்க ரூ.1½ கோடி மானியம் வழங்கப்படுகிறது என்று மாவட்ட கலெக்டர் சண்முகம் கூறியுள்ளார்.

தீவன மேலாண்மை

இதுதொடர்பாக ஈரோடு மாவட்ட கலெக்டர் சண்முகம் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி உள்ளதாவது:–

ஈரோடு மாவட்டத்தில் 3–ல் 2 பங்கிற்கு மேற்பட்ட மக்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களையே நம்பி வாழ்கின்றனர். ஈரோடு மாவட்டத்தில் 3 லட்சத்து 70 ஆயிரம் கால்நடைகள் உள்ளன. கால்நடைகளில் முக்கியமாக கறவை மாடுகளில் உற்பத்தி திறன் மற்றும் இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்கு சரியான தீவன மேலாண்மை மிக அவசியம்.

பசுந்தீவன அபிவிருத்தி திட்டம்

குறிப்பாக கலப்பின மாடுகளில் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், ஆண்டுதோறும் ஒரு கன்றினை பெறவும் தேவையான அளவு பசுந்தீவனத்தை வழங்க வேண்டும். பசுந்தீவனத்தை அதிகமாக கொடுப்பதால் அடர் தீவன செலவு குறைவதோடு மட்டுமின்றி கால்நடைகளுக்கு தேவையான புரதம், தாது உப்புக்கள், வைட்டமின் மற்றும் மாவு சத்துக்கள் போதிய அளவில் கிடைக்க ஏதுவாகின்றது.

இதனை கருத்தில் கொண்டு 2014–15–ம் ஆண்டில் தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி மாநில பசுந்தீவன அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ரூ.36 லட்சம் மானியம்

நீர்ப்பாசன வசதி கொண்ட விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் தரக்கூடிய கோ–3, கோ–4 ரக பல்லாண்டு பசுந்தீவனங்களை வளர்க்க ¼ ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. இதில் புல்கரணைகள் வாங்க ரூ.1,600–ம் ரசாயன உரங்கள் வாங்க ரூ.400–ம் வழங்கப்படுகிறது.

இதற்காக ஈரோடு மாவட்டத்தில் ரூ.450 ஏக்கரில் பல்லாண்டு பசுந்தீவனங்கள் வளர்க்க விவசாயிகளுக்கு ரூ.36 லட்சம் மானியம் வழங்கப்பட உள்ளது. இந்த திட்டத்தில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு மானியம் வழங்கப்படுகிறது.

2,900 ஏக்கர்

நீர்ப்பாசன வசதி இல்லாத மானாவாரி விவசாய நிலங்கள் கொண்ட விவசாயிகளுக்கு சோளப்பயிர், தட்டைப்பயிர் வளர்க்கும் திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 900 ஏக்கரில் சாகுபடி செய்ய ரூ.63 லட்சத்து 80 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

இதற்காக ஒவ்வொரு ¼ ஏக்கர் விவசாய நிலத்துக்கு தேவைப்படும் 8 கிலோ தரமான சோளவிதையும், ஒரு கிலோ தட்டைப்பயறு விதையும் ரூ.550 மதிப்பில்

அரசே கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்குகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு ஏக்கர் வரை மானியம் வழங்கப்படுகிறது. இதன்மூலம் புரத சத்துடன் கூடிய சோளத்தட்டை கால்நடைகளுக்கு தீவனமாக கிடைக்கும்.

## நீர் தெளிப்பான்

தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் கிடைக்கின்ற தண்ணீரை வீணாக்காமல் மிச்சப்படுத்தி பசுந்தீவனங்களுக்கு பாய்ச்ச மழைத்தூவி எனப்படும் நீர் தெளிப்பான் கருவி 220 விவசாயிகளுக்கு ரூ.41 லட்சத்து 25 ஆயிரம் மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. குறைந்தபட்சமாக ஒரு ஏக்கர் நிலத்தில் பல்லாண்டு பசுந்தீவனங்களான கோ–3, கோ–4 சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நீர் தெளிப்பான் கருவிகள் 75 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.

ஒரு நீர் தெளிப்பான் கருவியின் மதிப்பு ரூ.25 ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. ஆனால் இந்த கருவியின் மதிப்பு ரூ.25 ஆயிரத்துக்கு மேல் இருந்தால் மானிய தொகை போக மீதம் உள்ள தொகையை விவசாயிகளே செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

## அசோலா பச்சைப்பாசி

கால்நடைகளுக்கு புரதச்சத்து மிகுந்த தீவனங்கள் கிடைப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளும், கால்நடை வளர்ப்பவர்களும் பயன்பெறும் வகையில் 300 ஏக்கர் நிலத்தில் அகத்தி மரக்கன்றுகள் நட தேவையான தரமான விதைகள் 100 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் 4 கிலோ அகத்தி விதைகள் ரூ.1,600 மானியத்தில் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்துக்காக ரூ.4 லட்சத்து 80 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

பசுந்தீவன பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் அதனை ஈடு செய்வதற்காக கால்நடைகளுக்கு தேவையான புரதச்சத்து நிறைந்த அசோலா பச்சைப்பாசி உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதற்காக 400 விவசாயிகளுக்கு ரூ.6 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் அசோலா வளர்ப்பு தொட்டியும், விதைகளும் ஒரு விவசாயிக்கு ரூ.1,600 மதிப்பில் கொள்முதல் செய்து வழங்கப்பட உள்ளது. இந்த திட்டம் விலையில்லா ஆடுகள் திட்டத்தில் பயன்பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

ரூ.1½ கோடி மானியம்

இந்த ஆண்டு பசுந்தீவன அபிவிருத்திக்கு என கால்நடை பராமரிப்பு துறை சார்பில் ரூ.1 கோடியே 52 லட்சத்து 25 ஆயிரம் மானியம் வழங்க உத்தரவிடப்பட்டு உள்ளது. எனவே இந்த திட்டத்தில் பயன்பெற விவசாயிகள், கால்நடை வளர்ப்பவர்கள் தங்களது பகுதியில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரி டாக்டரை அணுகி தங்களுடைய பெயரை பதிவு செய்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மாவட்ட கலெக்டர் சண்முகம் கூறி உள்ளார்

## கரும்பு டன் ஒன்றிற்கு ரூ.3500 வழங்க வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்

**மோகனூர்,**

மத்திய, மாநில அரசுகள் 2014–15–ம் அரவை ஆண்டிற்கு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3500 அறிவிக்க வேண்டும் என மோகனூரில் நடந்த கரும்பு விவசாயிகள் சங்கத்தின் பேரவை கூட்டத்தில் வலி யுறுத்தப்பட்டது.

பேரவை கூட்டம்

மோகனூர் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின் 31–வது வருடாந்திர பேரவைக் கூட்டம் மோகனூரில் நடை பெற்றது. சங்க தலைவர் கந்தசாமி தலைமை தாங்கி னார். பொதுச் செயலாளர் வக்கீல் நடராசன் அறிக்கை

வாசித்தார். இதில் பொருளா ளர் ஸ்ரீதரன், துணை தலைவர் கள் எட்டிக்கன், ராமசாமி, துணை செயலாளர்கள் கனகராஜ், நவலடி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :–

மத்திய, மாநில அரசுகள் 2014–15–ம் அரவை ஆண்டிற்கு டன்னுக்கு ரூ.3500 என கரும்பு விலையை அறிவிக்க வேண்டும். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு, காய்ந்து கொண்டு இருக்கும் கரும்பை உடனடியாக முன்னுரிமை அடிப்படையில் ஆலை நிர்வாகம் வெட்டிக்கொள்ள வேண்டும். ஆண்டுதோறும் விவசாயிகள் சப்ளை செய்த கரும்பு டன்னுக்கு 1 கிலோ சர்க்கரையும், ஆலை சங்கத் தினர்கள் பங்கு மூலதனம் ஒன்றுக்கு 2 கிலோ சர்க்கரை யும், மானிய விலையில் ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும்.

<u>விதைகரணை மானியம்</u>

விவசாயிகளுக்கு விதை கரணை மானியம் வழங்க வேண்டும். ஆலைக்கு உட் பட்ட கிராம சாலைகளை ஆலை நிர்வாகம் செப்பனிட்டு, பராமரிக்க வேண்டும். எரிசாராய ஆலை கழிவு நீரை ஆலைக்கு பக்கத்திலேயும் மற்றுமு புறம்போக்கு நிலத்திலும் ஒப்பந்ததாரர்கள் விட்டு விடுகிறார்கள். அத னால் அருகில் உள்ள கிண றுகளில் தண்ணீர் மாசு அடை கிறது. எனவே ஆலைநிர்வாகம் ஒப்பந்தப்படி ஒப்பந்த நிலங் களில் எரிசாராய ஆலையின் கழிவுநீரை விடுமாறு கண் காணிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சுயதொழில் தொடங்கவும் வாய்ப்பு தோட்டக்கலைத்துறை படித்தவர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் கலெக்டர் சங்கர் தகவல்

தோட்டக்கலை துறை படித்தவர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளதாக கலெக்டர் சங்கர் தெரி வித்து உள்ளார்.

புதிய படிப்புகள் தொடக்கம்

தோட்டக்கலைத்துறை மேற் பார்வையாளர் படிப்பிற்கான ஒரு ஆண்டு பட்டய படிப்பை தமிழக அரசு அறிமுகம் செய்து உள்ளது. இதற்கான வகுப்பு கள் தொடக்க விழா ஊட்டி யில் உள்ள தோட்டக்கலை துறை வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் மணி தலைமை தாங்கினார். பின்னர் இந்த வகுப்புகளை கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்து பேசிய தாவது:-

ஊக்கத்தொகை

தோட்டக்கலைத்துறை மேற் பார்வையாளர் படிப்புகளை படிக்கும் மாணவ-மாணவி களுக்கு அரசு சார்பில் ஊக்கத் தொகையாக மாதம் ரூ.ஆயிரம் வழங்கப்படுகிறது. மேலும் பட்டயப்படிப்பு முடிந்ததும் இதனை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

தோட்டக்கலை துறை படித்தவர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளன மேலும் நகரப்பகுதிகள் மற் றும் நட்சத்திர ஓட் டல்களில் உள்ள சிறிய பூங்காக்களை உருவாக்கு தல், மலர்செடிகளை வளர்த்து பராமரித்தல் உள்ளிட்ட பணி களில் வேலை வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. ஒரு வீட்டில் சிறிய அளவில் மாடி தோட்டத்தை உருவாக்கினால் கூட உங்களுக்கு நல்ல வரு மானம் கிடைக்கும்.இந்த படிப்பின் போது மலர் செடிகளை உற்பத்தி செய்தல், நாற்றங்கால் அமைத்தல், விதைகள் சேகரித்தல், புல் வெளி பராமரிப்பு உள்ளிட் டவை குறித்து செயல் முறை விளக்கங்களுடன் கற்று தரப் படும். மேலும் மலர் பூங் கொத்து தயாரிப்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்.

இதன் மூலம் நீங்கள் சுயமாக தொழில் தொடங்க முடியும். மேலும் சிறிய அளவில் பூங் கொத்து தயாரிக்கும் கடைகள் வைத்தால் கூட நல்ல வரு மானம் கிடைக்கும். எனவே உங்களுக்கு கிடைத்த இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண் டும். இவ்வாறு அவர் பேசி னார்.

இந்த நிகழ்ச்சியில் ஊட்டி வேளாண்மை பல்கலைக்கழ கம் மற்றும் ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர்அனிதா, உதவி தோட்டக்கலை இயக்கு னர் மீராபாய் உள்பட ஏராள மானோர் கலந்து கொண்டனர்.

**<u>பருவ மழையை நம்பி கோமுகி அணை பாசன விவசாயிகள் நெற்பயிர் நடவு செய்வதில் தீவிரம்</u>**



பருவ மழையை நம்பி கோமுகி அணை பாசன விவசாயிகள் நெற்பயிர் நடவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கோமுகி அணை

விழுப்புரம் மாவட்டம் கல்வராயன்மலை அடிவாரத் தில் கோமுகி அணை உள்ளது. 46 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையின் பாதுகாப்பு கருதி பொதுப்பணித்துறை அதிகாரிகள் 44 அடி வரை தண்ணீரை தேக்கி வைத்து விவசாய பணிகளுக்கு திறந்து விடுகின்றனர். கல்வராயன் மலை வனப்பகுதியில் மழை காலங்களில் பொட்டியம், மாயம்பாடி, கல்படை ஆற்றின் வழியாக மழைநீர் கோமுகி அணைக்கு வருகிறது. கோமுகி அணையை நம்பி பழைய மற்றும் புதிய

பாசன வாய்க் கால்களில் திறந்து விடும் தண்ணீரை கொண்டு பரிகம், மண்மலை, வடக்கனந்தல், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதி களில் நேரடியாகவும், மறை முகமாகவும் 15 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது.

இந்த நிலையில், கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்து போனதால் கோமுகி அணையின் நீர்மட் டம் படிப்படியாக குறைந்த தால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட முடியாமல் போனது.

கிணற்று பாசனம் மூலம் விவசாய பணி

இதனால் கோமுகி அணை தண்ணீரை நம்பி பாசனம் செய்த விவசாயிகள் தங்களது நிலங்களில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்தியும், தூர்வாரியும் அதிகளவில் தண்ணீரை உறிஞ்சாத பயிர்களை சாகுபடி செய்து தங்களது குடும்பங் களை காப்பாற்றி வந்தனர். ஒருசில விவசாயிகள் 100 நாள் திட்ட பணிக்கு சென்று அதில் கிடைக்கும் ஊதியத்தை பெற்று பிழைப்பு நடத்தி வந்தனர். இந்நிலையில் வெப்ப சலனம் மற்றும் தென்மேற்கு பருவ மழை காரணமாக கல்வராயன் மலை பகுதிகளில் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்தது. இத னால் விவசாய விளை நிலங் கள் ஈரப்பதத் துடன் இருப்ப தால் கோமுகி அணை பாசன விவசாயிகள், பருவ மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் தங்களது விளை நிலங்களில் பெண் விவசாய கூலி தொழி லாளர் களை கொண்டு கடந்த 2 நாட்களாக 3-ம் போக நெல் சாகுபடிக்கான நடவு பணி களில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

தினகரன்

**அத்தியாவசிய உணவு பொருள் சட்டத்தில் சேர்ப்பு**

**வெங்காயம், உருளைக் கிழங்கு விலை உயர்வை தடுக்க அதிரடி: இருப்பு வைக்கவும் கட்டுப்பாடு**



**புதுடெல்லி**: வெங்காயம், உருளைக் கிழங்கு விலையை கட்டுப்படுத்தவும், தட்டுப்பாட்டை போக்கவும் இப்பொருட்களை அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தின் கீழ் மத்திய அரசு அதிரடியாக கொண்டு வந்துள்ளது. நாட்டில் வெங்காயம், உருளைக்கிழங்கு விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால், வியாபாரிகள் இவற்றை பதுக்குவதால், செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையை மேலும் உயர்த்த முயற்சிக்கப்படுகிறது. இந்த விலைவாசி உயர்வு காரணமாக மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த

முறைகேட்டை தடுத்து, இவற்றின் விலையை கட்டுப்பாட்டில் வைக்க, மத்திய அரசு பல்வே று நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக, வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரமாகவும், உருளை கிழங்கின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன்னுக்கு ரூ.27,000 ஆகவும் நிர்ணயித்துள்ளது.

இந்நிலையில், பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழுக் கூட்டம், டெல்லியில் பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் நேற்று நடந்தது. இதில், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கை அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது. இதன்படி, இப்பொருட்களை குறிப்பிட்ட அளவுக்கு மேல் இருப்பு வைக்கவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இனிமேல், இப்பொருட்களை மாநில அரசுகள் நிர்ணயிக்கும் அளவுக்கு மேல் வியாபாரிகள் இருப்பு வைக்க முடியாது. இந்த கட்டுப்பாடு ஓராண்டுக்கு நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவு பொருட்கள் சட்டம் - 1995ன் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தைக்கு எதிராக மாநில அரசுகள் உறுதியான நடவடிக்கை எடுக்க முடியும் என்று மத்திய சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்தார். ஏற்கனவே, கடந்த 1999- 2004ம் ஆண்டில் வெங்காயமும், உருளைக்கிழங்கும் அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

**தக்காளி விலை அதிகரித்துள்ளது**



**ராயக்கோட்டை**: கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையில் தினசரி கூடும் தக்காளி சந்தை பிரபலமானதாகும். காய்கறி, தக்காளி போன்றவைகளுக்கு தென்னிந்தியாவின் மிக பெரிய மார்க்கெட்டுகளில் ராயக்கோட்டை மார்க்கெட்டும் ஒன்றாகும். கடந்த வாரம் இந்த மார்க்கெட்டிற்கு தினமும் தலா 25 கிலோ எடை கொண்ட 8,000 கூடை தக்காளி வரத்து இருந்தது. அப்போது, ஒரு கூடை தக்காளி ரூ.200 முதல் ரூ.250 வரை ஏலம் போனது. சராசரியாக ஒரு கிலோ தக்காளி ரூ.8 முதல் ரூ.10 வரை விற்பனையானது. இந்நிலையில், ராயக்கோட்டை மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து வெகுவாக குறைந்துள்ளது. மழை இல்லாததாலும், அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதால் சரியான நேரத்தில் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சி முடியாத நிலையில் மகசூல் குறைந்துள்ளது.

இதனால், இந்த வாரம் தினமும் 5,000 கூடை தக்காளி மட்டுமே விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இதனால், அதன் விலை அதிகரித்துள்ளது என்று மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர். இதனால், ஒரு கூடை தக்காளி ரூ.350 முதல் ரூ.450 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. மொத்த விலையில் ஒரு கிலோ தக்காளி ரூ.14 முதல் ரூ.18 வரை ஏலம் போகிறது என்றும் வியாபாரிகள் சுட்டிகாட்டினர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

# மக்காச்சோளம், சின்ன வெங்காயத்தின் விலை: வேளாண் விற்பனை மையம் புது தகவல்

**எஸ். கல்யாணசுந்தரம்**



தமிழகத்தில் ஆடிப்பட்டத்தில் பயிர் செய்யப்படும் மக்காச்சோளம் மற்றும் சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு என்ன விலை கிடைக்கும் என்பது குறித்து திருச்சியில் உள்ள வேளாண் விற்பனை தகவல் மற்றும் அபிவிருத்தி மையம் முன்னறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

மக்காச்சோளம்

தமிழகத்தில் பெரம்பலூர், அரியலூர், கடலூர், திண்டுக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் மக்காச்சோளம் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் தற்போதைய விலை குவிண்டால் ரூ.1,480. வணிகர்களின் கூற்றுபடி தமிழகத்தில் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் தைப்பட்டத்தில் விளைந்த 15,000 டன் மக்காச்சோளத்தை விவசாயிகள் இருப்பு வைத்துள்ளனர்.

கர்நாடக அரசு சுமார் 7 லட்சம் டன் மக்காச்சோளத்தை கொள்முதல் செய்துள்ளது. பிஹாரிலிருந்தும் குவிண்டாலுக்கு ரூ.1,400 என்ற விலையில் அதிக வரத்து இருப்பதால் விலை உயர்வு இல்லாமல் தற்போதைய நிலையே தொடர வாய்ப்புள்ளது.

மேலும், ஜூன் மாதத்தில் ரூ.1,480-ஆக உள்ள மக்காச்சோளத்தின் விலை, அறுவடை காலமான நவம்பர் மாதத்தில் குவிண்டாலுக்கு ரூ.1,400-ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

சின்ன வெங்காயம்

சின்ன வெங்காயம் லாபம் தரும் முக்கியப் பயிர்களில் ஒன்றாக கருதப்படுவதால் ஆண்டு முழுவதும் பயிரிடப்படுகிறது. மத்திய அரசின் தேசிய தோட்டக் கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின்படி 2013-14-ல் தமிழகத்தில் வெங்காய சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 0.39 லட்சம் ஹெக்டேர் மற்றும் 4.72 லட்சம் டன்கள் என கணக்கிடப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு (செப்- நவ. 2013) சின்ன வெங்காயம் கிலோவுக்கு ரூ.45 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால், தற்போது தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவுக்கு ரூ.22 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை சரிவுக்கான காரணம், கடந்த ஆண்டில் நிலவிய அதிகபட்ச விலையால் விவசாயிகள் சின்ன வெங்காய சாகுபடியை அதிகரித்துள்ளனர். மேலும், இந்த ஆண்டு ஏற்றுமதி விலையும் குறைந்துள்ளது. அறுவடை காலமான செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் பண்டிகை மற்றும் தேவை அதிகரிப்பால் சின்ன வெங்காய விலை உயர வாய்ப்புள்ளது.

ஆய்வு முடிவுகளின்படி ஆடிப்பட்டத்தில் நடவு செய்தால் சின்ன வெங்காயத்துக்கு அறுவடை நேரத்தில் அதாவது செப்டம்பர் முதல் அக்டோபர் மாதம் வரையில் கிலோ ரூ.22 முதல் ரூ.25 வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் சின்ன வெங்காயம் விதைப்பு முடிவுகளை எடுக்கலாம்.

மேலும் விவரங்கள் அறிய துணை இயக்குநர் 94435 93971, 0431 2422142 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.